
## வேளாண்மை

### தேயிலை

1983ஆம் ஆண்டின் தேயிலை உற்பத்தி தற்காலிகமாக 1,793 இலட்சம் கிலோ கிறும்களாக மதிப்பிடப்பட்டு, 1956ஆம் ஆண்டு தொடக்கம் பதிவுசெய்யப்பட்ட ஆகக்குறைந்த அளவாக விளங்கியதுடன், 1982ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 85 இலட்சம் கிலோகிறும்கள் அல்லது 4.5 சதவீத வீழ்ச்சியைக் காட்டியது. உற் பத்தியில் ஏற்பட்ட இவ்வீழ்ச்சி மூன்று உயரவகைகளிலும் காணப்பட்டவிடத்து தாழ்நிலங்கட்கான வீழ்ச்சியே 14 இலட்சம் கிலோக்கிறும்கள் (2.2 சதவீதம்) கொண்ட ஆகக்குறைந்ததாகக் காணப்பட்டது. உயர் நிலங்களினதும், மத்திய நிலங்களினதும் உற்பத்தி முறையே 39 இலட்சம் கிலோக்கிறும்களாலும் (5.4 சத வீதம்) 32 இலட்சம் கிலோக்கிறும்களாலும் (6.2 சதவீதம்) வீழ்ச்சியடைந்து காணப் பட்டன. தேயிலைச்சபையினுல் வழங்கப்பட்ட தகவல்கட்கமைய வாங்கப்பட்ட கொழுந்துகளின் உற்பத்தியைத் தவிர்த்து, 1982இன் உற்பத்திகளோடு ஒப்பிடு மிடத்து மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைகளினது உற்பத்தி (மதோஅச) 56 இலட்சம் கிலோக்கிறும்களால் (8.2 சதவீதம்) வீழ்ச்சியடைந்தவிடத்து இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினது உற்பத்தி 43 இலட்சம் கிலோக்கிறும் களால் (7.5 சதவீதம்) வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. மக்கள் தோட்ட அபி விருத்திச் சபையினதும் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினதும் கொள்வனவு செய்யப்பட்ட இலைகளின் மூலமான உற்பத்தி முறையே 6 இலட்சம் கிலோக்கிறும்களினுலும் (9.7 சதவீதம்), 16 இலட்சம் கிலோக்கிறும்களினுலும் (12.4 சதவீதம்) வீழ்ச்சியடைந்தன. எனினும், தனியார்துறைப் பெருந்தோட்டங்களி னதும் கொள்வனவு செய்யப்பட்ட இலைகள், சொந்த இலைகள் என்பவற்றின் தேயிலை உற்பத்தி முறையே 28 இலட்சம் கிலோக்கிறும்களாலும், 3 இலட்சம் கிலோக்கிறும்களாலும் அதிகரித்துக் காணப்பட்டது. இவ்வாருக உற்பத்தியில் ஏற் பட்ட வீழ்ச்சியின் குறிப்பிடத்தக்க பண்பாக விளங்கியது யாதெனில் இவ்வீழ்ச்சி முக்கிய அரசதுறைக் கூட்டுத்தாபனங்களான மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை யிலும் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திலும் மட்டும் காணப் பட்டமையேயாகும். இவ்வுற்பத்தி நிகழ்ச்சியில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க பண்பு, மொத்த உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு, ஆண்டின் முதலரைப்பகுதி முழு வதிலும் நிலவிவந்த கடுமையான வரட்சி நிலைமைகளினதும், இதன்விளைவாக இக்காலப்பகுதியில் வளமாக்கிப் பாவனையில் ஏற்பட்ட வீழ்ச்சியினதும் இணைந்த விளைவே காரணமாக அமைந்தது. ஆண்டுக்காலப்பகுதியில் கிடைக்கப் பெற்ற நல்ல விலையினைப் பயன்படுத்துவதற்காக தனியார்துறை உற்பத்தியாளர் கள் பருவெட்டான கொய்தல் முறையினை மேற்கொண்டனர். இது குறிப்பாக சிறு உடைமையாளரைப் பொறுத்தவரை உண்மையாக இருக்கலாம்.

வளமாக்கியின் விலைகள் அதிகரித்தவிடத்தும், நீண்ட வரட்சி நிலை காணப் பட்டபோதும் ஆண்டுக்கான தேயிலைத்துறைக்கான வளமாக்கி வழங்கல்கள் முன் னைய ஆண்டினதைவிட 12,800 மெற்றிக் தொன்களால் அல்லது 12.5 சதவீதத்தால் அதிகரித்துக் காணப்பட்டன. வரட்சி ஆகக்கடுமையாக நிலவிய இரண்டாவது

## முதன்மை வேளாண்மைப் பயிர்களின் உற்பத்தி




இலங்கை மத்திய வங்கி

காலாண்டில் காணப்பட்ட வீழ்ச்சி தவிர்ந்த ஏனைய காலாண்டுகளில் வளமாக்கி வழங்கல்கள் அதிகரித்துக்காணப்பட்டன முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையினால் நிருவகிக்கப்பட்ட தோட்டங்களின்வள மாக்கிப் பாவனைகள் 1,706 மெற்றிக் தொன்களால் (5 சதவீதம்) அதிகரித்த விடத்து இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தால் நிருவகிக்கப்பட்ட தோட்டங்களில் 1,130 மெற்றிக் தொன்கள் (3 சதவீதம்) உயர்வடைந்து காணப் பட்டது. கிடைக்கத்தக்கதாக உள்ள தரவுகள் தனியார்துறைப் பெருந்தோட்டங் களில் குறிப்பிடத்தக்க அளவு வளமாக்கிப் பாவனை அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது. தனியார்துறைத் தேயிலைத் தோட்டங்கட்கும் அரசதுறைக்குமான மொத்தவளமாக்கி வழங்கல்களில் ஏற்பட்ட அதிகரிப்பு 1983ஆம் ஆண்டின் இரண் டாவது அரைப்பகுதியில் காணப்பட்ட சாதகமான காலநிலையினதும் மேம்பாட டைந்த உற்பத்தியாளர் இலாப எல்லையினதும் இணைந்த விளைவாகும்.

அட்டவணை 1.12

**தேயிலைப் புள்ளி விபரங்கள் 1981 — 1983**

| விடயம் | அலகு | 1981 | 1982(அ) | 1983(ஆ) |
|---|---|---|---|---|
| 1. உற்பத்தி .. | ப.இ.கி. கிறும்கள் | 210.1 | 187.8 | 179.3 |
| 1.1 உயர்நிலம் ... | ,, | 80.5 | 71.7 | 67.8 |
| 1.2 மத்தியநிலம் ... | ,, | 59.3 | 51.6 | 48.4 |
| 1.3 தாழ்நிலம் ... | ,, | 70.3 | 64.5 | 63.1 |
| 2. தேயிலை பயிரிடப்பட்ட பரப்பு ... | '000எக்டேயர்கள் | 245 | 242 | 242 |
| 3. வளமாக்கி வழங்கல்கள் .. | '000மெ.தொன்கள் | 103.3 | 102.7 | 115.5 |
| 4. மீளப்பயிரிடல் ... | எக்டேயர்கள் | 2.677 | 2,004 | 1,367 |
| 5. விலைகள் ... | | | | |
| 6.1 கொழும்பு தேறிய ... | ரூபா/கி.கி. | 17.71 | 22.52 | 36.96 |
| 6.2 ஏற்றுமதி க. ஏ. பெ. ... | ,, | 35.14 | 35.03 | 52.52 |
| 6. உற்பத்திக்கான செலவு ... | ,, | 18.79 | 22.68 | 23.56(அ) |
| 7. ஏற்றுமதிகள் ... | ப. இ. கி. கி. | 183.4 | 181.0 | 157.8 |
| 8. ஏற்றுமதி வருவாய்கள் .. | ரூ. ப. இ. | 6,444.0 | 6,342.2 | 8,295.0 |
| | (சிஎஉ ப.இ.) | (284) | (276) | (330) |
| 9. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீத மாகக் கூட்டப்பட்ட பெறுமதி (இ) .. | | 5.0 | 4.7 | 4.9 |

மூலங்கள்: இலங்கைத் தேயிலைச்சபை
தேசிய வளமாக்கிச் செயலகம்.
இலங்கை மத்திய வங்கி,

அ. திருத்தப்பட்டது.
ஆ. தற்காலிகமானவை.
இ. பயிரிடலும் பதனிடலும் மட்டும்.
குறிப்பு: எக்டேயர் ஒன்றுக்கான சராசரி விளைச்சலின் தரவு கிடைக்கவில்லை.

1983ஆம் ஆண்டில் தேயிலைப் பயிர்ச்செய்கையின் கீழ் பதிவுசெய்யப்பட்ட நிலப் பரப்பு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. எனினும் கிடைக்கத்தக்கதாகவுள்ள தற்கா லிகத்தரவுகள் பயன்தரும் நிலப்பரப்பு ஏறக்குறைய மாற்றமுறாது முன்னைய ஆண் டின் அளவிலேயே இருந்தமையையும் ஆண்டுக்காலப்பகுதியில் உற்பத்தியில் ஏற் பட்டவீழ்ச்சி எக்டேயருக்கான சராசரி விளைச்சலில் ஏற்பட்ட வீழ்ச்சியின் விளைவே யாகும் என்பதனையும் எடுத்துக்காட்டுகின்றது. மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையாலும் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தாலும் நிருவகிக் கப்பட்டு வந்த தோட்டங்களின் சராசரி விளைச்சல் முறையே 6 சதவீதத்தாலும், 9சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தது. இதற்கு ஆண்டின் முதலரைப்பகுதியில் நிலவிவந்த வரட்சி நிலையே முக்கிய காரணமாகும்.

மீள்நடுகைச் செயலாற்றத்தினைப் பொறுத்தவரை 1981ஆம் ஆண்டில் காணப்பட்ட குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பினைத்தொடர்ந்து தொடர்ச்சியான இரண்டாவது ஆண்டாக இவ்வாண்டிலும் ஏமாற்றமளிப்பதாகவே காணப்பட்டது. இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தால் மீளப் பயிரிடப்பட்ட நிலப் பரப்பு 35 சதவீதத்தால் 1982 ஆம் ஆண்டின் 747 எக்டேயரிலிருந்து 1983ஆம் ஆண்டில் 487 எக்டேயர்களாக வீழ்ச்சியடைந்தது. மக்கள் தோட்ட அபிவிருத்திச்சபையும் 33 சதவீதத்தால் 1982 இல் மீளப்பயிரிடப்பட்ட 640 எக்டேயர்களிலிருந்து 1983ஆம் ஆண்டில் 428 எக்டேயர்களாக வீழ்ச்சியினைக் காட்டியது. சிறு உடைமையாளர் பிரிவும் மீளப்பயிரிடப்பட்ட நிலப்பரப்பில் சிறிதளவான வீழ்ச்சியினை அறிவித்தது. மீள்நடுகைக்கான உதவுதொகை விகிதங்களும் இவ்வாண்டுக்காலப்பகுதியில் இருதடவைகள் 1983 மார்ச்சு மாதத்திலும் நவெம்பரிலும் திருத்தியமைக்கப்பட்டன. மார்ச் மாதத்தில் தாழ் நிலப் பிரதேசத்தில் உள்ள தனியார்துறைத் தோட்டங்களுக்கும் சிறு உடைமையாளர்கட்கும், உயர்நில, மத்தியநில அரச தோட்டங்கட்குமான உதவுதொகை விகிதம் எக்டேயருக்கு ரூ. 24,700 இலிருந்து ரூ. 29,700 ஆக அதிகரிக்கப் பட்டது. உயர்நில, மத்தியநில தனியார் துறைத்தோட்டங்கட்கும், சிறுஉடைமையாளர்கட்குமான உதவுதொகை விகிதம் எக்டேயருக்கு ரூ. 29,700 இலிருந்து ரூ. 35,800 ஆக அதிகரிக்கப்பட்டவிடத்து தாழ் நிலங்களில் இருந்த அரசதுறைத்தோட்டங்களுக்கு எக்டேயருக்கு ரூ. 19,700 இலிருந்து ரூ. 24,700 ஆக அதிகரிக்கப்பட்டது. இத் திருத்தத்தினதும் முன்னேற்றமடைந்த விலைகளினதும் தாக்கம் மீள்நடுகை நடவடிக்கைகளில் எவ்வித மாற்றத்தினையும் ஏற்படுத்தவில்லை. இதற்கு ஆண்டின் முதல் அரைப்பகுதியில் நிலவிய சாதகமற்ற காலநிலையே காரணமாகும்.

முன்னர் மாச்சு மாதத்தின் திருத்தத்தின் மூலம் வழங்கப்பட்ட ஊக்குவிப்புக்கள் செலவு அதிகரிப்பினால் பயனற்றுப்போனமையினால் 1983ஆம் ஆண்டு நவெம்பரில் உதவுதொகை விகிதங்கள் மீண்டும் திருத்தியமைக்கப்பட்டன. தாழ் நிலப்பிரதேசத்தின் தனியார்துறைத் தோட்டங்கட்கும் சிறு உடைமையாளர்கட்கும் உயர்நில, மத்தியநில அரச தோட்டங்கட்குமான விகிதம் எக்டேயருக்கு ரூ. 6,300 இனால் அதிகரிக்கப்பட்டவிடத்து, உயர்நில, மத்தியநில தனியார்துறைத் தோட்டங்களினதும் சிறுஉடைமையாளர்களினதும் விகிதம் எக்டேயருக்கு ரூ. 7200 இனால் அதிகரிக்கப்பட்டது. தாழ்நிலங்களின் அரசதுறைத்தோட்டங்களினது விகிதம் ரூ. 5,300 இனால் அதிகரிக்கப்பட்டது. ஆண்டினிறுதியில் மீளப் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு 42,265 எக்டேயர்கள் அல்லது மொத்தப் பயிரிடுகையின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிலப்பரப்பில் 17 சதவீதமாகக் காணப்பட்டது.தேயிலைக்கைத்தொழிலின் நீண்டகாலப்போக்கிற்கு துரிதப்படுத்தப்பட்ட மீள்நடுகையை விரைவுபடுத்தல் முக்கியமானதாக இருந்தாலும் இடைவெளிகளை நிரப்புவதற்கும் பெருமளவு முக்கியத்துவம் வழங்கப்படல்வேண்டும். ஏனெனில் இடைநிரம்பல் மீள்நடுகையைப்போலகுறுகிய காலத்தில் உற்பத்தியில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்த மாட்டாது. இது, குறிப்பாக முக்கியமானதாகும். ஏனெனில் அண்மைய கடந்த காலத்தில் தேயிலைச்செடியின் அடர்த்திபற்றதன்மை உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்படுவதற்கான காரணிகளில் முக்கியமானதொன்றாக இனங்கண்டு கொள்ளப்பட்டுள்

ளது. இது தொடர்பாக 1983ஆம் ஆண்டு நவெம்பர் மாதத்தில் இடைநிரப்பல் உதவுதொகை, செடியொன்றுக்கு ரூ. 2/- இலிருந்து ரூ. 4/-ஆக அதிகரிக்கப்பட்டமை ஒரு முக்கிய நடவடிக்கையாகக் கருதப்படலாம்.

பன்னுட்டுச் சந்தைகளின் நிரம்பலில் ஏற்பட்ட தட்டுப்பாடுகள் காரணமாக 1983 ஆம் ஆண்டில் தேயிலை விலைகளில் கணிசமானளவு அதிகரிப்புக் காணப்பட்டன. சராசரி ஏற்றுமதி (க.ஏ. பெ) விலை, முன்னைய ஆண்டில் பெறப்பட்ட விலைகளைவிட 1983 ஆம் ஆண்டில் 50 சத வீதமளவில் அதிகரித்தது. 1983 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இருந்து காணப்பட்ட இவ்விலை அதிகரிப்பு, உயர்ந்த உற்பத்திச் செலவுகள், குறைந்த இலாப எல்லை, முகாமைத்துவமற்ற நிலை போன்ற பல குறைபாடுகளை எதிர்கொண்டிருந்த தேயிலைக் கைத்தொழிலுக்கு ஒரு வரவேற்கத்தக்க நிவாரணமாகக் காணப்பட்டது.

தேயிலையின் கிலோகிருமொன்றுக்கான சராசரி உற்பத்திச் செலவு 4 சதவீதத்தால் 1982 ஆம் ஆண்டின் ரூபா. 22.68 இலிருந்து 1983 ஆம் ஆண்டில் ரூ. 23.56 ஆக அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. உற்பத்தியாளர்கட்கு நிவாரணம் வழங்கும் ஒரு நடவடிக்கையாக பெறுமான விகித விற்பனை வரி விதிக்கப்படும் மட்டம் கிலோகிருமொன்றுக்கு ரூ. 22/-இலிருந்து ரூ. 26/-ஆக 1983 மார்ச்சில் உயர்த்தப்பட்ட வேளையில் வரிவீதம் தொடர்ந்து மாற்றமின்றி 35 சதவீதமாகவே இருந்தது. எனினும், இவ்வாண்டுக் காலப்பகுதியில் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள், உற்பத்திச் செலவு அதிகரிப்புக்கள் உற்பத்தியாளர் இலாப எல்லையில் ஏற்படுத்திய பாதகமான விளைவுகளை எதிரீடு செய்வதற்குப் போதியதாக இருந்தது. உண்மையில், இவ்விலை அதிகரிப்புக்கள் 1983 யூலை மாதம் தொடக்கம் எல்லா வகைத் தேயிலைகள் மீதும் (தொகையான தேயிலை, உறையிலிடப்பட்ட தேயிலை, பொதியிலடைக்கப்பட்ட தேயிலை, உடன் தேயிலை, பச்சைத் தேயிலை) கிலோக்கிருமொன்றுக்கு குறிப்பிட்ட ஏற்றுமதித் தீர்வையை ரூ. 1/- இனுல் மேல் நோக்கித் திருத்தியமைக்கக் கூடிய நிலையினை ஏற்படுத்தியது. தேயிலைச் சபைத் தீர்வையும், 1983 மாச்சில் கிலோகிரு மொன்றுக்கு 90 சதத்திலிருந்து ரூ. 1/-ஆக மாற்றியமைக்கப்பட்டு மீண்டும் 1983 யூலையில் கிலோ கிருமுக்கு ரூ. 1.25ஆக அதிகரிக்கப்பட்டது. ஆண்டினிறுதியில் அடையப்பட்ட விலை அதிகரிப்புக்களோடு நிற்காமல், உற்பத்தித்திறன் மேம்பாடு, உற்பத்திச் செலவுக் குறைப்பு என்பவை கவனிக்கப்படாமல் விடப்படக் கூடாது. ஏனெனில் விலைகள் காலப்போக்கில் அதிகரிக்கும் தன்மையை இழந்துவிடக் கூடும்.

மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையும் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனமும் தங்கள் உற்பத்திச் செலவுகள் அதிகரித்த போதும் சாதகமான உற்பத்தியாளர் இலாப எல்லையினைப் பெறக் கூடியதாக இருந்தன. தற்காலிக தரவுகள் பெருந்தோட்ட அளவிலான மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையினதும், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினதும் உற்பத்திச் செலவு முறையே கிலோகிருமுக்கு 2 சதவீதத்தினுலும் 3 சதவீதத்தாலும் உயர்வடைந்ததைக் காட்டுகின்றது. 1983ஆம் ஆண்டில் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையினது உற்பத்தியாளர் இலாப எல்லை கிலோகிருமுக்கு ரூ. 14.00ஆல் அதிகரித்

தும், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினதும் இலாப எல்லை ரூ. 13.00ஆல் உயர்வடைந்தும் காணப்பட்டது. இது அவர்களது திரவத்தன்மையை குறிப்பிடத்தக்க அளவுக்கு மேம்பாடடையச் செய்து அவர்கள் செலவு மிகுந்த வங்கிக் கடன்பாடுகளில் தங்கியிருக்கும் நிலையினைக் குறைத்தது.

சிறு உடைமையாளர்கள் பலதரப்பட்ட நிறுவனக் குறைபாடுகளுக்கிடையே இயங்கிவந்த போதும், பன்னாட்டுச் சந்தைகளில் தேயிலைக்குக் கிடைத்த அதிகரித்த விலைகளின் நன்மைகளில் ஒருபகுதி இவ்வாண்டுக் காலப்பகுதியில் சிறு உடைமையாளர்கட்கும் கிடைத்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் தேயிலைச் சிறு உடைமையாளர் அபிவிருத்தி மேலாண்மைச் சபையினால் நடாத்தப்பட்டுவந்த தொழிற்சாலைகட்கு வழங்கப்பட்ட பச்சைத் தேயிலைக் கொழுந்துகட்காக வழங்கப்பட்ட விலை 65 சதவீதம் தொட்டு 87 சதவீதம் வரை அதிகரித்துக் காணப்பட்டது. எனினும், இவர்கள் விலை அதிகரிப்புக்களினால் நன்மை பெற்றார்கள் என்ற காரணத்துக்காக நிறுவன அமைப்புக்கள், குறிப்பாக விரிவாக்கச் சேவைகள், சந்தைப்படுத்தல் போன்றவற்றினை மேம்படுத்தும் வேலைகள் கவனிக்கப்படாமல் விடப்படக்கூடாது.

தேயிலை சிறு உடைமைகள் அபிவிருத்தி மேலாண்மைச் சபை தொடர்ந்தும் சிறு உடைமையாளர்கள்துறை முக்கியமாகக் காணப்பட்ட குறிப்பிட்ட சில பகுதிகளில் குறிப்பாக தென் மாகாணத்தில் சிறு உடைமையாளர்கட்கு பணியாற்றிவந்தது. அதன் விரிவாக்கத் திட்டத்தின் கீழ் தேயிலை சிறு உடைமைகள் அபிவிருத்திச் சபை 1983 மே மாதத்தில் கக்மன தேர்தல் தொகுதியில் பாப்கொடை என்னுமிடத்தில் ஒரு புதிய தொழிற்சாலையைத் திறந்ததோடு நில அபிவிருத்திச் சபையிடமிருந்து பலாங்கொடைத் தேர்தல் தொகுதியில் ரந்தொட எனுமிடத்தில் இன்னுமொரு தொழிற்சாலையையும் சுவீகரித்துக்கொண்டது. இரண்டு அரச வங்கிகளான இலங்கை வங்கியும், மக்கள் வங்கியும் காலி, மாத்தறை மாவட்ட தேயிலைச் சிறு உடைமையாளர்கட்குத் தொடர்ந்தும் வளமாக்கிக் கொடுகடன் திட்டத்தை நடாத்தி வந்தன. எனினும் இந் நிறுவனக் கொடுகடன்களைப் பெறும் வசதிகள் தொடர்ந்தும் குறைவாகக் காணப்பட்டமையே சிறு உடைமையாளர்களிற் பெரும்பான்மையோரால் எதிர்கொள்ளப்பட்ட முக்கிய பிரச்சனையாக இருந்தது. தொடர்ந்து கூறப்பட்டு வருவதுபோல சிறு உடைமையாளர் துறையில் சிறந்த உற்பத்திக்கும் விரிவாக்கத்துக்கும், ஒரு மேம்படுத்தப்பட்டதும் பரந்ததுமான விரிவாக்கச் சேவை மிகவும் முக்கியமானதொன்றாகும். இந் நோக்கங்களை அடைவதில் அதன் விரிவாக்க சந்தைப்படுத்தல் வளமாக்கிப் பங்கீட்டு நடவடிக்கைகளில் கூடிய கவனம் செலுத்துவதன் மூலம் பெருமளவுக்கு உதவலாம்.

தேயிலைக் கைத்தொழிலில் தேயிலைப்பதனிடல் பிரிவினைப் பாதிக்கும் சில மாற்றங்களும் ஏற்பட்டன. விலை உதவி நடவடிக்கைத் திட்டத்தின்கீழ் இயங்கிவந்த தொழிற்சாலைகளினால், தயாரிப்புக் கட்டணமாக கழித்துக்கொள்ளப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்த தொகை, 1983 மாச்சு தொடக்கம் உயர்ந்து செல்லும் பதனிடல் செலவின் பாதகமான தாக்கத்தை எதிரீடு செய்ய ஒரு கிலோகிராம் தேயிலைக்கு ரூ. 6.50இலிருந்து ரூ. 7.25 ஆக உயர்த்தப்பட்டது.

தரமான தேயிலை உற்பத்தியினை ஊக்குவிக்குமுகமாக தேறிய உயரவகை சராசரி விலைகளைவிடக் கூடுதலான சராசரி விலைகளைப் பெற்ற தொழிற்சாலைகட்கு வழங்கப்பட்ட ஊக்குவிப்புப்படி 25 சதவீதத்திலிருந்து 35 சதவீதமாக அதிகரிக்கப்பட்டது.

மீண்டும், மீண்டும் முன்னைய பல ஆண்டறிக்கைகளில் வலியுறுத்தப்பட்டது போல அரசினால் நடாத்தப்படும் பெருந்தோட்டங்களின் செயலாற்றம் விரும்பப்பட்ட அளவினைவிடக் குறைவாகவே காணப்பட்டது. அரசதுறை நில முகாமைத்துவ நிறுவனங்களைப் பாதித்த சில முக்கிய காரணிகள் முதலீட்டுப் பற்றாக்குறை, சிறந்த ஊக்குவிப்புத் திட்டமின்மை, குறைந்த அளவிலான உற்பத்தி, உயர்ந்து செல்லும் உற்பத்திச்செலவு என்பனவாகும். திறந்த பொருளாதாரக் கொள்கை தொடர்ந்து நடைபெற வேண்டுமாயின் அரசதுறைத் தேயிலைத் தோட்டங்களின் சிறந்த செயலாற்றம் (இவ்விடயத்துக்கு எல்லாப் பெருந்தோட்டங்களும்) மிகவும் முக்கியமாதலால் இவ்வாண்டுக்காலப்பகுதியில் முதலீட்டு, முகாமைத்துவ விடயங்களுக்கு முதன்மை வழங்கப்பட்டுள்ளது. அரசுக்குச் சொந்தமான பெருந்தோட்டங்களின், நிலப்பயன்பாட்டுத்திறமையை மேம்படுத்தவும், உற்பத்தித்திறனை அதிகரிக்கவும், தோட்டத்துக்குத்தோட்டம் நடுத்தரகால முதலீட்டுச் செயற்றிட்டம் முதலீட்டினை அதிகரிக்க இவ்வாண்டுக்காலப்பகுதியில் தயாரிக்கப்பட்டு வருகின்றது. முகாமைத்துவத்துக்கும், தொழிலாளர்களுக்கும் ஊக்குவிப்புக்கள் எதுவுமின்றி முதலீடு செய்வது மட்டும் விரும்பத்தக்க விளைவுகளை ஏற்படுத்த மாட்டாது என்பதனால், அரசதுறைப் பெருந்தோட்டங்களின் ஊக்குவிப்புத் திட்டங்களை திருத்தியமைத்தலுக்கும் முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படுமாயின் இந்நடவடிக்கைகளின் சாதகமான விளைவுகளை அண்மைய எதிர்காலத்தில் தேயிலை உற்பத்தியிலும் தேசிய பொருளாதாரத்திலும் காணக்கூடியதாக இருக்கும்.

**இறப்பர்**

1963ஆம் ஆண்டின் இறப்பர் உற்பத்தி தற்காலிகமாக 1,350 இலட்சம் கிலோகிறாம்களாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது முன்னைய ஆண்டின் உற்பத்தியினைவிட 8 சதவீதம் அதிகமானதாகும். சிறு உடைமைகளையும் உள்ளடக்கிய தனியார்துறை பதிவுசெய்யப்பட்ட நிலப்பரப்பில் 71 சதவீதமாக விளங்கி மொத்த உற்பத்தியில் 890 இலட்சம் கிலோகிறாம்கள் அல்லது 66 சதவீதத்திற்கு வகைகூறியது. இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தாலும் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையாலும் முகாமைப்படுத்தப்பட்டுவந்த அரசதுறைப் பெருந்தோட்டங்கள் பயிரிடப்பட்ட மொத்த நிலப்பரப்பில் 29 சதவீதத்தைக் கொண்டு தேசிய உற்பத்தியில் 460 இலட்சம் கிலோகிறாம்கள் (வாங்கப்பட்ட 22 இலட்சம் கிலோக்கிறாம்கள் லேற்றெக்ஸ்யையும் உள்ளடக்கி) அல்லது 34 சதவீதத்துக்கு வகைகூறியது. அதிகரிப்பின் முக்கிய பண்பாகக் காணப்பட்டது யாதெனில் அது தனியார்துறையில் மட்டுமே முற்றாகக் காணப்பட்டமையே யாகும். தனியார்துறையில் உற்பத்தி அதிகரிப்பு ஏற்படுவதற்கு சராசரி விளைச்சல் அதிகரிப்பே காரணமாக அமைந்தது. இது இறப்பர் மரங்களிலிருந்து அள

வுக்கு மீறிப் பாலெடுத்ததன் மூலமே ஏற்பட்டதாகும். 1983ஆம் ஆண்டில் இறப்பர் விலைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அளவு அதிகரிப்பு, தனியார்துறை உற்பத்தியாளர்கள் கூடிய அளவில் பாலை எடுப்பதன்மூலம் உற்பத்தியினை அதிகரிக்கத் தூண்டியிருக்கலாம். 1983ஆம் ஆண்டில் பாலெடுத்தலிற்குட்பட்ட நிலப் பரப்பு 164,248 எக்டேயர்களாக மதிப்பிடப்பட்டு இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 4 சதவீத வீழ்ச்சியைக்காட்டியது.

1983ஆம் ஆண்டில் மீள்நடுகைக்காகப் பிடுங்கப்பட்ட நிலப்பரப்பு 19 சத வீதத்தால் 1972ஆம் ஆண்டின் 7,083 எக்டேயர்களிலிருந்து 5,728 எக்டேயர் களாக வீழ்ச்சியடைந்தது. விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்புக் காரணமாக இலாபத் தன்மை அதிகரித்தமை, குறிப்பிடத்தக்க அளவுக்கு மீள்நடுகை உதவுதொகைகள் வழங்கப்பட்டபோதும், மீள்நடுகை நடவடிக்கைகளை ஒத்திவைக்கும் முடிவினை எடுக்கச் செய்திருக்கலாம்.

1983ஆம் ஆண்டின் எக்டேயருக்கான சராசரி விளைச்சல் 823 கிலோகிறாம் களாக மதிப்பிடப்பட்டு, முன்னைய ஆண்டினதைவிட 13 சதவீதங்கொண்ட குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பைக் காட்டியது. இது 1978ஆம் ஆண்டு தொடக் கம் பதிவுசெய்யப்பட்ட ஆகக்கூடிய மட்டமாகும். இதனை முன்னைய ஆண்டின் சராசரி விளைச்சலில் ஏற்பட்ட 3 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடலாம். எனினும், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தால் முகாமைப்படுத்தப்பட்ட பெருந்தோட்டங்களின் சராசரி விளைச்சல் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தவேளையில், மக்கள் தோட்ட அபிவிருத்திச்சபை 1 சதவீதங்கொண்ட சிறிதளவு மேம்பாட்டினைப் பதிவுசெய்திருந்தது. இது விளைச்சல் மேம்பாடு பெரும்பாலும் சிறு உடைமைகளையும் உள்ளடக்கிய தனி யார்துறையில் மட்டுமே ஏற்பட்டதைக் காட்டுமிடத்து, உயர்ந்த விலைகளின் நலனைப்பெறும் நோக்குடன் தனியார்துறை உற்பத்தியாளர் அளவுக்கு மீறி மரங்களில் பாலெடுத்தனர் என்பதனையும் தெளிவாகக் காட்டுகின்றது. அளவுக்கு மீறிப் பாலெடுப்பதினால் மரங்களினது உற்பத்திக்கால அளவு குறைக்கப்படலாம் என்ற ஆபத்தோடு தொடர்ந்து எதிர்கால உற்பத்தியிலும் பாதகமான விளைவு களை ஏற்படுத்தக்கூடும்.

முன்னைய மூன்று ஆண்டுகளைப் போலல்லாது இறப்பர் துறைக்கான வளமாக்கி வழங்கல்கள் 12 சதவீதத்தால் 1983ஆம் ஆண்டில் 18,500 மெற்றிக் தொன்களாக அதி கரித்தன. எனினும் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையும், இலங்கை அரச பெருந் தோட்ட கூட்டுத்தாபனமும் முன்னைய ஆண்டினைப் போலவே வளமாக்கிப் பாவனை யில் வீழ்ச்சியினையே அறிவித்துள்ளன. இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத் தாபனத்தின் வீழ்ச்சி 5,400 மெற்றிக் தொன்களாகவும் மக்கள் தோட்ட அபிவிருத் திச் சபையின் வீழ்ச்சி 100 மெற்றிக் தொன்களாகவும் காணப்பட்டன. இது 1983ஆம் ஆண்டில் தனியார் துறையில் வளமாக்கிப் பாவனை குறிப்பிடத்தக்களவு அதிகரித் துள்ளமையைக் காட்டுகின்றது. இந்த ஆண்டுக் காலப்பகுதியில் தனியாருக்குரிய இறப்பர் நிலங்களில், உயர்ந்த விலைகளும், அதிகரித்த உற்பத்தியும் இணைந்து வளமாக்கிப் பாவனையைப் பொறுத்தவரை சாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தி

யுள்ளது போலத் தோன்றுகின்றது. தனியார்துறையின் மரங்களில் அளவுக்கு மீறிப் பாலெடுத்தலின் விளைவாக ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகளைக் குறைக்கும் நோக்கத்துடன் வளமாக்கி பாவனையை அதிகரித்திருக்கவும் கூடும். எனினும், இன்னும் தனியார்துறையில் உள்ள பெரும்பான்மையான சிறு உடைமையாளர் முதிர்ச்சியடைந்த இறப்பர், நிலங்களில் போதியளவு வளமாக்கியினை பாவிப்பதாகத் தோன்றவில்லை.

அட்டவணை 1.13

**இறப்பர் புள்ளிவிபரங்கள் 1981-1983**

| விடயம் | கூறு | 1981 | 1982 (அ) | 1983(ஆ) |
|---|---|---|---|---|
| 1. உற்பத்தி | ப. இ. கி. கி. | 124 | 125 | 135 |
| 2. பரப்பளவு | | | | |
| 2.1 பயிர்ச் செய்கைக்குட்பட்ட | '000 எக்டேயர் | 205.6 | 205.7 | 205.6 |
| 2.2 பால் எடுக்கும் | ,, | 176.0 | 170.7 | 164.2 |
| 3. விளைச்சல் | கி. கி. / எக்டேயர் | 705.0 | 729 | 823 |
| 4. வளமாக்கி வழங்கல்கள் | '000 மெ. தொன்கள் | 16.8 | 16.5 | 18.5 |
| 5. மீள் நடுகை | எக்டேயர்கள் | 6,442 | 5,866 | 5,119 |
| 6. விலைகள் | | | | |
| 6.1 எற்றுமதிகள் க. ஏ. பெ. | ரூ. / கி. கி. | 21.80 | 17.68 | 22.77 |
| 6.2 கொழும்பு ஆர்.எஸ். எஸ். 1 | ,, | 10.04 | 10.18 | 13.95 |
| 7. உற்பத்திச் செலவு (இ) | ,, | 8.92 | 9.66 | வி.கி. |
| 8. ஏற்றுமதிகள் | ப. இ. கி. கி. | 132.5 | 131.3 | 125.2 |
| 9. உள்நாட்டு நுகர்வு | ,, | 16.2 | 16.4 | 16.4 |
| 10. ஏற்றுமதி வருவாய்கள் | ரூ.ப. இ. (சிஎஉ. ப. இ.) | 2,889.0 (128) | 2,323.0 (101) | 2,852.0 (114) |
| 11. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாகக்கூட்டப்பட்ட பெறுமதி (ஈ) | | 2.3 | 2.1 | 2.1 |

(அ) திருத்தப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) அரசதுறை, தோட்டங்கள், தனியார்துறை தோட்டங்களினதும் சிறு உடைமையாளர்களினதும் உறபத்தியில் கணிக்கப்பட்ட சராசரி செலவு
(ஈ) பயிர் வளர்த்தலிலும், பதனிடலிலும் மட்டும்.

மூலங்கள்: றப்பர் கட்டுப்பாட்டுத் திணைக்களம்.
தேசிய வளமாக்கிச் செயலகம்.
இலங்கை மத்திய வங்கி.

தற்காலிக தரவுகட்கமைய இவ்வாண்டுக் காலப்பகுதியில் மீள்நடுகை செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு 5,119 எக்டேயர்களாக விளங்கி, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 13 சதவீத வீழ்ச்சியைக் காட்டியது. எனினும் அரசதுறை மீள்நடுகையில் சிறிதளவு முன்னேற்றத்தினைக் காட்டியது. மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையினுல் முகாமைப்படுத்தப்பட்ட தோட்டங்களில் மீள்நடுகை செய்யப்பட்ட நிலப்பரப்பு 1982ஆம் ஆண்டின் 755 எக்டேயர்களிலிருந்து 1983ஆம் ஆண்டில் 871 எக்டேயர்களாக அதிகரித்த வேளையில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினுல் முகாமைப்படுத்தப்பட்ட தோட்டங்களின் மீள்நடுகை 1982ஆம் ஆண்டின் 812 எக்டேயர்களிலிருந்து 1983ஆம் ஆண்டில் 1,030 எக்டேயர்களாக அதிகரித்துக்காணப்பட்டது. 1983ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் உலக வங்கியின் உதவியுடனுன இறப்பர் புனருத்தாரண செயற்றிட்டத்தின் கீழ், களுத்துறை, கேகாலை, இரத்தினபுரி, மாவட்டங்களில் 2,457 எக்டேயர்கள் மீள்நடுகைசெய்யப்பட்டன. இது முன்னைய ஆண்டினதைவிட 19 சதவீதம் குறைவானதாகும். மீள்நடுகை செய்யப்பட்ட நிலப்பரப்பில் காணப்பட்ட மொத்தமான

வீழ்ச்சி, ஆண்டின் கூடிய காலப்பகுதியில் நிலவிவந்த கடுமையான வரட்சியின் பாதகமான தாக்கத்தினைப் பிரதிபலிக்கின்றது. 1983ஆம் ஆண்டினிறுதியில் மொத்தமாக மீள்நடுகை செய்யப்பட்ட நிலப்பரப்பு பயிர்ச் செய்கையின் கீழ் உள்ளதாகப் பதிவு செய்யப்பட்டுள்ள மொத்த நிலப்பரப்பில் 166,780 எக்டேயர்கள் அல்லது 81 சதவீதமாகக் காணப்பட்டது.

1983ஆம் ஆண்டில் புதிதாகப் பயிரிடப்பட்ட பரப்பு 1,745 எக்டேயர்களாக விளங்கி1982ஆம் ஆண்டினதைவிட சிறிதளவாக 95 எக்டேயர்கள் கொண்ட அதிகரிப்பைக் காட்டியது. எனினும் அரசதுறைத் தோட்டங்கள் புதிதாகப் பயிரிடப்பட்ட நிலப்பரப்பில் 126 எக்டேயர்கள் கொண்ட வீழ்ச்சியைக் காட்டின.

1983 மார்ச்சில் தனியார் தோட்டங்களுக்கும் சிறு உடைமையாளர்கட்குமான மீள்நடுகை உதவுதொகை எக்டேயருக்கு ரூ. 18,533 இலிருந்து ரூ. 22,239ஆக அதிகரிக்கப்பட்டவிடத்து அரசதுறைக்கு எக்டேயருக்கு ரூ. 12,355 இலிருந்து ரூ. 16,062 ஆக் அதிகரிக்கப்பட்டது. இத்துடன் மீள்நடுகை வரியும், இறப்பர் மீள்நடுகைவரி நிதி மூலங்களை அதிகரிப்பதற்காக கிலோ கிருமுக்கு ரூ. 0.86 இலிருந்து ரூ. 1.36 ஆக திருத்தியமைக்கப்பட்டது.

இதே வேளையில் புதிதாகப் பயிரிடுதலுக்கான உதவு தொகையும் திருத்தியமைக்கப்பட்டது. தனியார்துறைத் தோட்டங்கட்கும் சிறு உடைமையினர்கட்குமான விகிதம் எக்டேயருக்கு ரூ. 16,680இலிருந்து ரூ. 20.386 ஆக அதிகரிக்கப்பட்ட வேளையில் அரசதுறைக்கான தொகை எக்டேயருக்கு ரூ. 6,795 இலிருந்து ரூ. 12,355 ஆக அதிகரிக்கப்பட்டது.

1983ஆம் ஆண்டுக்கான இறப்பரின் உற்பத்திச் செலவுபற்றிய முழுமையான தரவுகள் முற்றாகக் கிடைக்கத்தக்கனவாயில்லை. மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையிடமிருந்தும் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திடமிருந்தும் கிடைக்கத்தக்கதாகவிருந்த தரவுகள் இவ்வாண்டுக்கான உற்பத்திச் செலவு முறையே 15 சதவீதத்தாலும், 8 சதவீதத்தாலும் அதிகரித்தமையைக் காட்டுகின்றன. எனினும், இவ்வாண்டுக் காலப்பகுதியில், உற்பத்தியாளர் இலாப எல்லையைக் குறிப்பிடத்தக்க அளவுக்கு உயர்த்தக் கூடியளவுக்கு இறப்பரின் விலைகள் அதிகரித்தன. இவ்வதிகரிப்புக்களினால், அரசதுறைத் தோட்டங்கள், தனியார்துறைத் தோட்டங்கள், சிறு உடைமையாளர் எனும் எல்லாவகை உற்பத்தியாளர்களும் பயனடைந்தமை புலனாகின்றது. இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினதும் 1983 ஆம் ஆண்டுக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள தரவுகட்கமைய உற்பத்தியாளர் இலாப எல்லைகள் 1982ஆம் ஆண்டின் கிலோகிருமுக்கு 38 சதவீதத்திலிருந்து 1983ஆம் ஆண்டில் ரூ. 4.60 ஆக அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இரண்டு துறைகட்குமிடையிலான உற்பத்தித் திறன் உற்பத்திச் செலவமைப்புக்களின் ஒப்பீட்டு மட்டங்களைப் பார்க்குமிடத்து தனியார் தோட்டங்கள், சிறு உடைமையாளர்கள் இவ்வாண்டுக்காலப் பகுதியில் அரசதுறையினைவிட மிகச் சிறந்த இலாப எல்லைகளைப் பெற்றுள்ளனர்.

அரசதுறைத் தேயிலைப் பெருந்தோட்டங்களைப் போன்றே அரசாங்கம் பொதுவாக இறப்பர் பயிர்ச் செய்கையை புனருத்தாரணம் செய்ய

வேண்டியதனை குறிப்பாக அரசிற்குச் சொந்தமான இறப்பர் தோட்டங்களின் புனருத்தாரணத்தை அங்கீகரித்தது. மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையினுலும், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தாலும் நிர்ணயிக்கப்பட்டுவந்த இறப்பர் தோட்டங்களுக்கான, நடுத்தர காலத்துக்கான தோட்டத்துக்குத் தோட்டம் முதலீடு செய்யும் செயற்றிட்டம், உற்பத்தி அடிப்படையையும் தரத்தையும் மேம்பாடடையச் செய்யவும், செலவினைக் குறைப்பதற்கும் தயாரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் 1984ஆம் ஆண்டில் ஓரளவு வெளிநாட்டு மூலங்களின் நிதியீட்டலுடன் நடைமுறைப்படுத்தப்படவிருக்கின்றது. இம் முதலீட்டுச் செயற்றிட்டத்தின் பொருளாதார வருவாய் விகிதம் 16 சதவீதமாக இருக்குமென ஓரளவுக்கு மதிப்பிடப்பட்டுள்ளதோடு இத்திட்ட நன்மைகள் 20 வருட காலத்துக்கு நீடிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இறப்பரின் நீண்டகால உற்பத்தி எதிர்பார்ப்புக்கள் பெருமளவுக்கு, பயிர்ச் செய்கைக்குட்பட்ட மொத்த நிலப்பரப்பில் குறிப்பிடத்தக்களவு பங்குக்கு வகை கூறும் சிறு உடைமையாளர் துறையின் போக்கில் பெருமளவுக்குத் தங்கியுள்ளது. சிறு உடைமையாளருக்கான நிறுவனக் குறைபாடுகளான விரிவாக்கச் சேவைக் குறைகள், பதனிடல், கொடுகடன், சந்தைப்படுத்தல் வசதிகள் குறைக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமாயின், இத்துறையின் பெருமளவிலான உற்பத்தி இயலளவு நியாயமான காலத்திற்குள் பெறப்படலாம்.

இறப்பரின் உள்நாட்டு நுகர்வு முன்னைய ஆண்டில் அறிவிக்கப்பட்டது போலவே 1983ஆம் ஆண்டிலும் 164 இலட்சம் கிலோகிராம்களாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது இறப்பர் அடிப்படையிலான கைத்தொழில்கள் இவ்வாண்டுக் காலப்பகுதியில் விரிவடையவில்லையென்பதைக் காட்டுகின்றது. இறப்பரின் உள்ளூர் நுகர்ச்சியில் பெருமளவுக்கு வகைகூறும் இலங்கை ரயர் கூட்டுத்தாபனம் தொடர்ந்தும் அதன் இயலளவினைவிடக் குறைவாகவே செயற்பட்டுவந்தது. சாதகமான சந்தைநிலைகள் இருந்தபோதும் இயலளவு முழுமையாகப் பயன்படுத்தப்படாதபோது கூட்டுத்தாபனத்தின் உற்பத்தித்திறனை அதிகரிக்க வேண்டிய தேவையை வலியுறுத்த வேண்டிய அவசியமில்லை.

**தெங்கு**

கடந்த சில ஆண்டுகளாக வளர்ச்சிப்போக்கினைக் காட்டிவந்த தெங்கு உற்பத்தி 1983ஆம் ஆண்டில் பின்னடைந்து தற்காலிகமாக 23,130 இலட்சம் காய்களாக மதிப்பிடப்பட்டு முன்னைய ஆண்டினைவிட 8 சதவீதங்கொண்ட வீழ்ச்சியைப் பிரதிபலித்தது. முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதிகளுடன் ஒப்பிடுகையில் ஆண்டின் முதல் அரைப்பகுதிக்கான உற்பத்தி 3 சதவீதத்தாலும் இரண்டாவது அரைப்பகுதிக்கான உற்பத்தி 13 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. உற்பத்தியின் அதிகரிப்புப் போக்கில் காணப்பட்ட இம்மாறுபட்ட நிலை 1983ஆம் ஆண்டில் காணப்பட்ட வரட்சி நிலையினுல் முக்கியமாக ஏற்பட்டதாகும்.

தேங்காயெண்ணெய் கடந்த ஆண்டின் இதே காலப்பகுதிகளுடன் ஒப்பிடுகையில் முதல் அரைப்பகுதியில் 17 சதவீதத்தாலும் இரண்டாவது அரைப்பகுதியில் 30 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. ஆண்டுக்கான உற்

பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி 25 சதவீதமாகும். தேங்காய்த்துருவல் உற்பத்தி கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ஆண்டின் முதல் அரைப்பகுதியில் 10 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து இரண்டாவது அரைப்பகுதியில் 17 சதவீதத்தால் அதிகரித்துக் காணப்பட்டு, கடந்த ஆண்டின் மொத்த உற்பத்தியுடன் ஒப்பிடுமிடத்து 4 சதவீதங்கொண்ட சிறிதளவிலான அதிகரிப்பினைக் காட்டியது. தேங்காயெண்ணெய், தேங்காய்த்துருவல் ஆகியவற்றின் உற்பத்தியில் முதலரைப்பகுதியில் காணப்பட்டவீழ்ச்சிக்கு தேங்காய்உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியும் உடன் தேங்காய் சந்தையில் ஏற்பட்ட விலை அதிகரிப்பும் ஓரளவு காரணமாக இருந்ததுடன் இது தேங்காயெண்ணெய், தேங்காய்த்துருவல் உற்பத்திக்கான காய்களின் கிடைப்பனவையும் குறைத்தது.

அட்டவணை 1.14

**தெங்குப் புள்ளிவிபரங்கள் 1981 - 1983**

| விடயம் | அலகு | 1981 | 1982 | 1983(அ) |
|---|---|---|---|---|
| 1. உற்பத்தி (ஆ) .. | ப.இ. காய்களில்(இ) | 2,258 | 2,521 | 2,313 |
| 1.1 தேங்காய்த் துருவல் ... | ப.இ. காய்களில(இ) | 276 | 286 | 296 |
| 1.2 தேங்காய் எண்ணெய் ... | ப.இ. காய்களில(இ) | 605 | 820 | 619 |
| 1.3 உலர்த்திய தேங்காய்(ஈ) | ப.இ. காய்களில் | 10 | 19 | 19 |
| 1.4 உடன்காய் ஏற்றுமதிகள்(உ) | ப.இ. காய்களில் | 2 | 9 | 5 |
| 1.5 உள்நாட்டுதேங்காய்நுகர்வு(ஊ) | ப.இ. காய்களில் | 1,350 | 1,366 | 1,373 |
| 2. சராசரி விலை | | | | |
| 2.1 கொழும்பு ... | காய்க்கு ரூபா | 1.80 | 1.60 | 2.25 |
| 2.2 ஏற்றுமதி க.வ.பெ ... | காய்க்கு ரூபா | 2.45 | 3.32 | 3.65 |
| 3. வளமாக்கி வழங்கல்கள் .. | 000 மெ.தொ. | 37.7 | 30.2 | 35.7 |
| 4. உற்பத்திச் செலவு ... | காய்க்கு ரூபா | 0.55 | 0.57 | 0.90 |
| 5. மீள் பயிரிடல்/கீழ் பயிரிடல் (எ) | எக்டேயார் | 3,555 | 3,543 | 2,641 |
| 6. புதிய பயிரிடல் (எ) ... | எக்டேயார் | 5,259 | 5,291 | 3,394 |
| 7. ஏற்றுமதி வருவாய்கள் .. | ப. இ. ரூபா | 1,438 | 1,497 | 1,921 |
| | (சிஎஉபஇ.) | (64) | (65) | (76) |
| 7.1 உள்வீட்டு உற்பத்திகள்(ஏ) ... | ப. இ. ரூபா | 1,011 | 1,003 | 1,409 |
| | (சிஎஉபஇ.) | (45) | (44) | (56) |
| 7.2 ஏனைய உற்பத்திகள் .. | ப.இ. ரூபா | 427 | 494 | 512 |
| | (சி.எ.உ.ப.இ) | (19) | (21) | (20) |
| 8. மொ.உ.உற்பத்தியில் சதவீதமாகக் கூட்டப்பட்ட பெறுமதி(ஐ) ... | | 4.1 | 4.1 | 3.8 |

மூலங்கள்: தெங்கு அபிவிருத்தி.மேலாண்மைச் சபை
தேசிய வளமாக்கிச் செயலகம்
தெங்குப் பயிர்ச்செய்கை சபை
இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகம்

(ஆ) மதிப்பீடு (உலர்த்திய தேங்காய் இருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்களின் சீராக்கஞ் செய்யப்படுவதற்காக பகுப்பாய்வு மொத்த உற்பத்தியுடன் கூட்டப்படுவதில்லை.)

(இ) தேங்காய்க்குச் சமனான ஒரு – மெற். தொன் தேங்காய்த் துருவல் = 6,800 காய்கள்
– மெற். தொன் எண்ணெய் = 8,000 காய்கள்
– மெற். தொன் உலர்த்திய தேங்காய் = 4,925 காய்கள்

(ஈ) ஏற்றுமதிகள் மட்டும்

(உ) நீண்டதொரு காலப்பகுதியின் கட்டுப்பாடுகளின் பின்னர் உடன்காய்களின் ஏற்றுமதி 1981 மேயில் மீளத் தொடங்கியது. பின்பு 1983 திசெம்பர் 1ஆந் திகதியிலிருந்து 31ஆம் திகதிவரை தடைசெய்யப்பட்டது.

(ஊ) தலைக்குரிய வீட்டு நுகர்வு 1981, 1982ஆம் ஆண்டுகளுக்கு 90 காய்களெனவும் 1983ஆம் ஆண்டிற்கு 92 காய்களெனவும் கொண்ட அடிப்படையில் மதிப்பிடப்பட்டது. கைத்தொழில் பயன்பாட்டினைத் தவிர.

(எ) விபரமான தரவுகள் கிடைக்காமையின் காரணமாக 0.4 எக்டேயர்களுக்கும் குறைவான உடைமைகளில் மேற்சொல்லப்பட்ட பயிரிடல் நடவடிக்கைகளை இது உள்ளடக்கவில்லை.

(ஏ) தேங்காய் எண்ணெயின் ஏற்றுமதி 1983 ஓகத்து 12ஆம் நாளிலிருந்து 31ஆம் நாள் வரை தடை செய்யப்பட்டது.

ஐ) உற்பத்தி செய்தலும் பதனிடலும் மட்டும்.

தேங்காய் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியினுலும் இரண்டாம் அரைப் பகுதியில் உடன் தேங்காய் சந்தையில் ஏற்பட்ட விலை உயர்வுகளாலும் எண்ணெய் உற்பத்தி தொடர்ந்து பாதிக்கப்பட்டபோதும், ஓரளவுக்குத் தேங்காய்த்துருவல் தொழிலுக்கு கிடைத்த சாதகமான ஒப்பீட்டு விலைமாற்றத்தினுலும் தேங்காய்த்துருவல் ஆலையாளரால் தங்கள் வெளிநாட்டுச் சந்தையினை நிலையாக வைத்திருப்பதற்காக உற்பத்தியினை அதிகரிக்க எடுத்த முயற்சிகளினுலும் தேங்காய்த்துருவல் கைத்தொழில் இக்காலப்பகுதியில் ஓரளவுக்கு மீட்சி பெறக்கூடியதாக இருந்தது. 1983 செத்தெம்பரில் அறிமுகப்படுத்தப்பட்ட ஏற்றுமதி ஊக்குவிப்புத்திட்டம் தேங்காய்த்துருவல் உற்பத்தியாளர்களுக்கு அவர்களின் சாதாரண உற்பத்தி மட்டத்தினைவிட அதிகமாக ஏற்றுமதிக்குத் தயாரிக்கப்படும் ஒவ்வொரு மெற்றிக் தொன் தேங்காய்த்துருவலுக்கும் வழங்கப்பட்ட ரூ. 2,000/-ம் தேங்காய்த்துருவல் கைத்தொழிலின் மேம்பட்ட செயலாற்றத்துக்கு ஓரளவு காரணமாக இருந்திருக்கலாம்.

1983ஆம் ஆண்டு யூலை மாத கலவரங்களின்போது 47 ஆயிரம் மெற்றிக் தொன் கொண்ட மொத்த ஆண்டுச் செயலாற்றத்தினைக் கொண்டிருந்த ஒன்பது தேங்காயெண்ணெய் ஆலைகள் அழிக்கப்பட்டன. எனினும் நாட்டின் எண்ணெய் ஆலைச் செயலாற்றம் தேவைக்கு அதிகமாக எண்ணெய் இருந்தமையால் இது அவ்வளவு பாதிப்பினை உற்பத்தியில் ஏற்படுத்தவில்லை. ஓகத்து 12ஆந் திகதி ஏற்படுத்தப்பட்ட ஏற்றுமதித்தடை ஓகத்து 31ஆந் திகதி விரைவாக நீக்கப்பட்டமை இதனைப் பிரதிபலிக்கின்றது.

தெங்குத்துறைக்கான வளமாக்கி வழங்கல்கள் உச்ச ஆண்டான 1980 தொடக்கம் வீழ்ச்சிப்போக்கில் காணப்பட்டு 1983ஆம் ஆண்டில் 18 சதவீதத்தால் 35,670 மெற்றிக் தொன்களாக அதிகரித்தது. எனினும், இது 1980ஆம் ஆண்டின் வழங்கல் தொகையின் 64 சதவீதமாகவே காணப்பட்டது. முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதிகளுடன் ஒப்பிடுகையில் வளமாக்கி வழங்கல்கள் ஆண்டின் முதல் அரைப்பகுதியில் 9 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தவிடத்து இரண்டாவது அரைப்பகுதியில் 34 சதவீதத்தினுல் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது. வழங்கல்களில் காணப்பட்ட இப்போக்கு, இரண்டாவது அரைப்பகுதியில் தேங்காய் விலையில் ஏற்பட்ட குறிபிடத்தக்க அதிகரிப்பும் மூன்றும் காலாண்டுப் பகுதியின் இறுதியிலும் நான்காம் காலாண்டுப் பகுதியிலும் காணப்பட்ட சாதகமான காலநிலையும் வளமாக்கிப் பாவனையைத் தூண்டியமையைக் காட்டுகின்றது.

இலங்கை வங்கியினுலும், மக்கள் வங்கியினுலும் தொழிற்படுத்தப்படும் தெங்கு வளமாக்கிக் கொடுகடன் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கையும் மீளச்செலுத்தப்பட்ட தொகையும் தொடர்ந்தும் 1983ஆம் ஆண்டில் வீழ்ச்சிப்போக்கினையே காட்டின. இரண்டு வங்கிகளினுலும் வழங்கப்பட்ட கடன்களின் மொத்த எண்ணிக்கை 51 சதவீதத்தால் 1982ஆம் ஆண்டின் 1,198இலிருந்து 1983ஆம் ஆண்டில் 591 ஆக வீழ்ச்சியடைந்தவிடத்து வழங்கப்பட்ட தொகை 43 சதவீதத்தால் 1982ஆம் ஆண்டின் ரூ. 91 இலட்சத்திலிருந்து 1983ஆம் ஆண்டில் ரூ. 52 இலட்சத்துக்கு வீழ்ச்சியடைந்தது. தேசிய வள

மாக்கிச் செயலகம் இவ்வீழ்ச்சிக்குரிய காரணங்களைக் கண்டுபிடிப்பதற்கான ஆய்வொன்றினை மேற்கொண்டுள்ளது. தெங்கு வளமாக்கிக் கொடுகடன் திட்டத்தின் கீழான கொடுகடன் வீழ்ச்சியடைந்த நிலையிலும் தெங்குத்துறைக்கான மொத்த வளமாக்கி வழங்கல்களில் ஏற்பட்ட அதிகரிப்பு ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் பெறப்பட்ட உயர்ந்த உற்பத்தியாளர் விலைகளின் விளைவாக கிடைத்த அதிகரித்த வருவாய்மூலம் நிதியிடப்பட்டிருக்கலாம் என்பதைக் காட்டுகிறது.

1983ஆம் ஆண்டில் வழங்கல்கள் அதிகரித்துக் காணப்பட்டபோதும், தெங்குத் துறையிலான வளமாக்கிப்பாவனை வரலாற்றுப் பாவனை மட்டங்களோடு ஒப்பிடுகையில் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றன. விதந்துரைக்கப்பட்ட அளவின்படியாக மதிப்பிடப்பட்ட தேவைகளின் அடிப்படையில் பார்க்குமிடத்து பயன்பாடுமிகவும் குறைவானதாகும். பெரும்பான்மை உற்பத்தியாளர்கள் வளமாக்கியினை அடியோடு பாவிக்கவில்லை. வீட்டுத்தோட்டங்களும், சிறு உடைமைகளும் முக்கியத்துவம் வகிக்கின்றமை, இரண்டுவருடங்களின் பின்னரே விளைவுகளைப் பெறக்கூடியதாக இருக்கின்றமை, உற்பத்தியாளரின் வளமாக்கி சம்பந்தமான இத்தகைய போக்குக்கு விளக்கம் தரும் காரணிகளாக உள்ளன.

தெங்கு நிலங்களின் இடைப்பயிர்ச் செய்கையின் 1980ஆம் ஆண்டு தொடக்கம் காணப்பட்டுவந்த வீழ்ச்சிப்போக்கு 1983ஆம் ஆண்டிலும் தொடர்ந்து காணப்பட்டது. 179 எக்டேயர்கள் மட்டுமே இவ்வாண்டுக் காலப்பகுதியில் இடைப்பயிர் செய்யப்பட்டதுடன் இது முன்னைய ஆண்டில் இடைப் பயிர்ச் செய்யப்பட்ட நிலப் பரப்பினைவிட 10 சதவீதம் குறைவாகக் காணப்பட்டது. இடைப்பயிர் செய்கைக்கான உதவு தொகைத்திட்டத்திற்கான உற்பத்தியாளர் ஆதரவு குறைவாகக்காணப்பட்டதோடு முன்னைய சில ஆண்டுகளை விட வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. இடைப்பயிர்ச் செய்கை, உற்பத்தியாளர்கட்கு மேலதிக வருமானத்தை ஏற்படுத்துவதோடு நிலப்பயன்பாட்டினையும் செறிவாக்கி தேசிய பொருளாதாரத்துக்கு காரணமான நலன்களை ஏற்படுத்துவதனுல் தெங்கு நிலங்கட்கு, சாதாரண உதவு தொகைத் திட்டத்தை விட மேலும் பயனளிக்கத்தக்க நடவடிக்கைகளான நீர்ப்பாசன வசதிகளையும் ஏற்படுத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

தெங்குக் கைத்தொழிலின் தற்போதைய நிலையின் மறுசீரமைப்பு மிகவும் அத்தியாவசியமென்பதை வலியுறுத்தவேண்டும். எனினும் இவ்வாண்டுக்காலப் பகுதியில் தெங்குத்துறை மறு சீரமைப்பு நடவடிக்கைகள் மிகவும் குறைந்த அளவிலேயே மேற்கொள்ளப்பட்டன. இவ்வாண்டுக்காலப்பகுதியில் 5.539 எக்டேயர்கள் நிலப்பரப்பு மறு சீரமைக்கப்பட்டது. இது முன்னைய ஆண்டுக்கான நிலப்பரப்புடன் ஒப்பிடுகையில் 50 சதவீதமாகக் காணப்பட்டது. 1983ஆம் ஆண்டுக்கான மறு சீரமைப்பு உதவுதொகைக் கொடுப்பனவுகள் ரூ, 32 இலட்சமாகக் காணப்பட்டன. இவ்வாண்டுக்காலப்பகுதியில் கீழ்ப் பயிரிடப்பட்டதும், மீளப்பயிரிடப்பட்டதுமான மொத்த நிலப்பரப்பு 25 சதவீதத்தால் 2,641 எக்டேயர்கட்கு வீழ்ச்சியடைந்தது. இத்தேவைக்காக வழங்கப்பட்ட உதவுதொகைக் கொடுப்பனவு

1982ஆம் ஆண்டின் ரூ. 130 இலட்சத்திலிருந்து 1983ஆம் ஆண்டில் ரூ. 96 இலட்சத்துக்கு வீழ்ச்சியடைந்தது. மறு சீரமைப்பு, கீழ்நடுகை, மீள்நடுகை என்பவற்றில் காணப்பட்ட குறைந்தசெயலாற்றம், ஆண்டின் முதல்அரைப்பகுதியில் காணப்பட்ட நீடித்த வரட்சியின் தாக்கத்தினைப் பிரதிபலிக்கின்றது. மீள்நடுகையிலும், கீழ் நடுகையிலும் ஏற்பட்டுவரும் வீழ்ச்சியினைத் தடைசெய்யும் முகமாக இத்தேவைகட்காக வழங்கப்பட்ட உதவுதொகை விகிதம் 1983 ஆம் ஆண்டு நவெம்பர் மாதத்தில் ஒரு எக்டேயருக்கு ரூ. 7,400 இலிருந்து ரூ. 12,000 மாக அதிகரிக்கப்பட்டது. புதிதாக நடுகை செய்யப்பட்ட நிலப்பரப்பு முன்னைய ஆண்டில் 1 சதவீதம்கொண்ட சிறிதளவு அதிகரிப்பினைக் காட்டியவிடத்து 1983ஆம் ஆண்டில் 36 சதவீதத்தால் குறிப்பிடத்தக்களவில் 3,394 எக்டேயர்களாக வீழ்ச்சியடைந்தது. தெங்குக் கைத்தொழிலின் நீண்டகால நலனுக்கு புதிதாகப் பயிரிடுதல் மிகவும் முக்கியமெனக் கருதப்பட்டமையால் 1983ஆம் ஆண்டு நவெம்பரில் உதவுதொகை விகிதம் 34 சதவீதத்தால் எக்டேயருக்கு ரூ. 8,650 இலிருந்து ரூ. 11,500ஆக அதிகரிக்கப்பட்டது.

தெங்குத்துறையில் மீளப்பயிரிடுகை, கீழ்ப்பயிரிடுகை ஆகியவற்றின் செயலாற்றம் வரலாற்றிலேயே மிகக்குறைவானதாக இருக்கிறது. பெரும் ஊறுகளை ஏற்படுத்திய அடிக்கடி தோன்றும் வரட்சி நிலைமைகள் மட்டுமன்றி அதிகரித்த எதிர்பாரா இழப்புக்களும் கீழ்ப் பயிரிடல் மீளப்பயிரிடலுக்கான ஊக்குவிப்புக்களைத் தடைசெய்கின்றமையும், ஏறத்தாழ ஐந்து தொடக்கம் ஆறு வருடங்கள் வரையிலான பலனை எதிர்பார்த்துக் காத்திருக்கும் நீண்டகாலம் ஆகியனவும் இக்குறைந்த செயலாற்றத்திற்கு காரணமாயிருக்கலாம். இந்நோக்கில் உதவுதொகையுடன், குறைந்த காலத்தில் பயன்தரும் வரட்சிக்குத் தாக்குப்பிடிக்கும்உயர்ந்த விளைவுதரும் வகைகளை விருத்திசெய்வதும் மீள்நடுகை நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வதற்கு முக்கியமான ஒரு முன் ஏற்பாட்டு நடவடிக்கையாக இருக்கின்றது.

கவனத்திற்குரிய இன்னொரு விடயம் என்னவெனில் தேங்காயெண்ணெய்க் கைத்தொழில் ஆகும். வழக்கொழிந்ததும், மிகப் பழமைவாய்ந்ததுமான பொறிகளுடன் கூடிய பெருமளவு எண்ணிக்கைகொண்ட சிறிய ஆலைகளும் மிகக் குறைந்த பெரிய ஆலைகளுமே நாட்டின் தேங்காயெண்ணெய் ஆலைக் கைத்தொழிலின் முக்கிய பண்பாக இருக்கின்றது. தற்பொழுது பயன்பாட்டிலுள்ள பெரும்பாலான வெளியேற்றங்கள் 50,60 ஆண்டுக்கு அதிகமான பழமைவாய்ந்தவையென அறிவிக்கப்பட்டுள்ளன. இதன்விளைவாக எண்ணெய் பிரித்தெடுத்தல் திறமையற்றதாயிருப்பதுடன் பிண்ணாக்கில் இருக்கும் எஞ்சியுள்ள எண்ணெயின் சராசரி அளவு ஏறத்தாழ 13 சதவீதம் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. உயர்ந்த அமுக்கம் கொண்ட வெளியேற்றிகளுடன், பொருத்தமான பேணல்கள் பிண்ணாக்குக் கொண்டிருக்கும் எண்ணெயை ஏறத்தாழ 6.8 சதவீதத்திற்குக் குறைப்பதுடன் உயர்ந்த எண்ணெய் உற்பத்தியையும் பிண்ணாக்கின் தரத்தில் சிறந்த நிலையையும் ஏற்படுத்தும். இந்நன்மைகளைக் கவனத்திற் கொள்கையில், எண்ணெயைப் பிரித்தெடுக்கும் புதிய தொழில்நுட்ப முறைகளின் முதலீடுகளில் பெரும் கவனம் செலுத்துவது மிக இன்றியமையாததாக இருக்கின்றது.

தெங்குப் பயர்ச்செய்கையின் கீழ் உள்ள பரப்பளவு 451,000 எக்டேயர்களாக மதிப்பிடப்பட்டிருப்பதுடன் இது இறப்பர் அல்லது தேயிலையின் கீழ் உள்ளபரப்ப ளவைவிட ஏறத்தாழ இரண்டு மடங்காகவும் இருக்கிறது. எனினும் தேயிலை அல்லது இறப்பருடன் ஒப்பிடுகையில் தேசிய பொருளாதாரத்திற்கான இதன் பங்களிப்பு விகிதசமமாக இல்லாதிருப்பதற்கு திறமையற்ற நிலப்பயன்பாட்டுத்தன்மை ஒர ளவும், குறைந்தளவு பயிர்ச்செய்கை நடைமுறைகள் ஓரளவும் காரணங்களாக வுள்ளன. இவை நில உரிமையாளர் தோட்டங்களில் இல்லாதிருக்கின்றமை, வீட் டுத்தோட்டப் பயிர்ச்செய்கையே மிகவும் முக்கியமாக நிலவுகின்றமை, பயிர்செய் கைப் பரப்பில் பெருந்தொகையானவை சராசரியாக சிறிய உடைமைகளாக விளங்குகின்றமை ஆகியவற்றின் இணைந்த விளைவாகும்.

தெங்குத்துறையின் அபிவிருத்தியில் பெரும்பாலும் மிக முக்கிய பங்கினை ஆற்றக்கூடிய ஒன்றுக விலையிடல் கொள்கையின் முக்கியத்துவம் விளங்குகின்றது இத்துறையின் விலையிடல் கொள்கை பயிர்செய்வோர் தமது முதலீடுகளிலிருந்து நியாயமான வருவாயைப்பெறவேண்டும் என்ற அடிப்படைக் குறிக்கோளை அடிப் படையாகக் கொண்டிருக்கவேண்டும். தேங்காய்களுக்கு கவர்ச்சியான பண்ணை விலைகளின்றி, மேலதிகச் செலவுகளைக்கொண்டிருக்கும் வளமாக்கிப்பயன்பாட்டினை உள்ளடக்கிய சிறந்த பயிர்ச்செய்கைமுறைகளையும் பின்பற்றும்படி பயிர்ச்செய் கையாளர்களைத் தூண்டுவது கடினமானதாகும். 1983ஆம் ஆண்டின் பின்னரைப் பகுதியில் நிலவிய நிலைமைகள், வானிலை நிலைமைகள் சாதகமாக இருக்கும் பட் சத்தில் சிறந்த தேங்காய் விலைகள் வளமாக்கிப் பயன்பாட்டினைக் குறிப்பிடத்தக் களவிற்கு ஏற்படுத்தும் என்பதனை தெளிவாகக்காட்டின.

எப்படியெனினும் பயிர்ச் செய்கையாளர்களுக்கு நியாயமான தேங்காய் விலை களை உறுதிப்படுத்துவது என்பது பல காரணங்களின் விளைவாக கடினமானதொரு பணியாகவே இருக்கிறது. அவற்றுள் ஒன்று தேங்காய்ச் சந்தை பயிர்செய்வோரின் பேரம் பேசும் வலுவைக் குறைக்கும் சில குறைபாடுகளைக் கொண்டிருப்பதாகும். உற்பத்தி செய்யப்படும் காய்களில் ஏறத்தாழ 75 சதவீதம் உள்நாட்டிலேயே நுகரப்படுகின்றமையால் நுகர்வோர் விருப்புகளுக்கும் உற்பத்தியாளர் இலாபங் களுக்குமிடையில் காணப்படும் முரண்பாடு இன்னொன்றுகும். ஆயினும் நியாய மான உயர்ந்த தேங்காய் விலைகளைப் பேணுவது கைத்தொழிலின் நீண்டகால ஆற்றல் தன்மைக்கு மிக இன்றியமையாததாகும். அதேநேரம் இலங்கைபோன்ற ஏற்றுமதி இறக்குமதிபொருளாதாரத்திற்கு உயர்ந்த ஏற்றுமதி வருவாய்கள் மிக மிக இன்றியமையாதனவாக இருப்பதனுல் சாதகமான பன்னுட்டுச் சந்தை நிலை மைகள் நிலவும் காலப் பகுதியில் தேங்காய் உற்பத்திகளின் ஏற்றுமதிகளுக்கு ஊக்குவிப்புகளை அதிகரித்து பேணுவதே மிக முக்கியமானதாக இருக்கின்றது.

**சிறு ஏற்றுமதிப் பயிர்கள்**

சிறு ஏற்றுமதிப்பயிர்கள் என்பது பெருமளவு பயிர்களைக் குறிப்பதுடன் இவற் றின் உற்பத்தி முக்கியமாக ஏற்றுமதியும் செய்யப்படுகின்றது. மொத்த ஏற்றுமதி வருவாய்களில் இத்தகைய பயிர் ஒவ்வொன்றினதும் பங்களிப்பு மூன்று முதன்மை வேளாண்மைப் பயிர்களான தேயிலை, இறப்பர், தெங்கு ஆகியவற்றுடன் ஒப்பிடு

கையில் சார்புரீதியில் மிகக் குறைவாகவே இருக்கின்றது. இப்பயிர்களில் பெரும் பாலானவை கறுவா, ஏலக்காய் என்பன தவிர்ந்த ஏனைய சிறு உடைமைகளில் ''கலப்புத்தோட்டங்கள் ''அல்லது ''வீட்டுத்தோட்டங்களாக'' வளர்க்கப்படுகின் றன. பயிர் செய்யப்படும் பரப்பளவு அல்லது உற்பத்தி மீதான உண்மையான தரவு கள் இன்னமும் கிடைக்கவில்லை. இதனல் இப்பயிர்களின் உற்பத்தியில் பெரும் தொகையும் ஏற்றுமதி செய்யப்படுகின்றது, என்ற எடுகோளின் அடிப்படையில் சிறுஏற்றுமதிப்பயிர்கள் துறையின் அபிவிருத்திகள் ஏற்றுமதி அளவினூடாக வழிப் படுத்தப்படுகின்றது.

கராம்பு (79%) மரமுந்திரி (46%) ஆகியவற்றின் ஏற்றுமதி அளவில்ஏற்பட்ட கணிசமான அதிகரிப்புக்கள் 1983ஆம் ஆண்டில் கராம்பு, மரமுந்திரி, ஆகியவற்றின் உற்பத்தி குறிப்பிடத்தக்களவில் உயர்ந்துள்ளமையை எடுத்துக்காட்டின. கொக்கோ, கோப்பி ஏற்றுமதி அளவுகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்களும் கூட இவ்வாண்டுக்காலத்தில் உற்பத்தியில் ஏற்பட்ட வளர்ச்சியை எடுத்துக்காட்டுகின் றனபோல் தெரிகின்றது. எனினும் இவ்வகைக்குள் அடங்கும் ஏனைய மூன்று முக்கிய பயிர்களான எள்ளு, கறுவா, ஏலக்காய் என்பனவற்றின் ஏற்றுமதி அளவு குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

கறுவாவின் முதன்மை இறக்குமதியாளரான மெக்சிக்கோ அதன் சென்மதி நிலுவை இடர்பாடுகளைப் பேணுவதற்காகவும் கறுவாவிற்கு மிகச்சிறந்த பதிலீ டான ''காசியா'' மலிந்த விலையில் கிடைக்கத்தக்கதாகவும் இருந்தமையினுலும் 1983ஆம் ஆண்டில் அதன் கறுவா இறக்குமதியை மேலும் குறைத்துக்கொண் டது. ஏற்றுமதிச்சந்தை வாய்ப்புக்களில் ஏற்பட்ட இத்தொடர்ச்சியான சீர்கேடு கள் அண்மைக்கால உற்பத்திகளின் மீது குறிப்பிடத்தக்க பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. சிறு ஏற்றுமதிப் பயிர்கள்துறையின் உற்பத்திச் செயலாற் றம் 1983ஆம் ஆண்டுப்பகுதியில் பெருமளவிற்குச் சீரற்றதாக இருந்ததெனினும் மூழுமையாகப் பார்க்கையில் முன்னைய ஆண்டிலும் பார்க்கச் சிறப்பானதாக இருந்தது.

சிறு ஏற்றுமதிப்பயிர்கள் ஆதரவுத்திட்டத்தின் கீழான மீள்நடுகை, புதிதாகப் பயிரிடுகை செயலாற்றம் இவ்வாண்டுக்காலத்தில் ஏமாற்றம் தருவதாக இருந்த துடன் மீள்நடுகை செய்யப்பட்டதும் புதிதாகப் பயிரிடுகை செய்யப்பட்டதுமான பரப்பளவு 1983 ஆம் ஆண்டில் 904 எக்டேயர்களுக்கு 62 சதவீதத்தால் வீழ்ச்சி யடைந்தது. இது பயிர்ச்செய்கை நடவடிக்கைகளின் மீது பெரும்பாலும் ஆண்டு முழுவதும் நிலவிய வரட்சி நிலைமையின் பாதகமான தாக்கத்தைப் பிரதிபலித் ததுமட்டுமன்றி ஏற்றுமதியைப் பொறுத்தவரையிலும் கூட ஓரளவிற்கு நிலையற்ற தன்மையைக் காட்டியது. இதே திட்டத்தின்கீழ் செலுத்தப்பட்ட உதவுதொகை யின் அளவு 1982இன் ரூ. 69 இலட்சத்திலிருந்து 1983இல் ரூ. 62 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இத்தொகையில் 37 சதவீதம் வீட்டுத்தோட்டங்களின் அமைப் புப் பயிர்ச்செய்கைக்கு உதவுவதற்காகச் செலுத்தப்பட்டது என்பது முக்கியமாகக் கவனிக்கத்தக்கதாகும். 1983இல் 5 ஏக்கர்வரையிலான உடைமைகள் வீட்டுத்தோட் டங்களில் கலப்புப் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கான உதவுதொகைக்கு

தகைமையுடையதாகச் செய்யப்பட்டன. இதற்குமுன்னர் அரை ஏக்கர் வரையிலானஉடைமைகள் மட்டுமே உதவுதொகையைப் பெறுவதற்குதகைமையுடையனவாகஇருந்தன.

தெங்கு, இறப்பர் நிலங்களிலும் பொருளியற் சிக்கனமற்ற தேயிலை நிலங்களிலும் பல சிறு ஏற்றுமதிப்பயிர்களை விரிவாக்குவதற்கான பெருமளவு உள்ளார்ந்தவளம் காணப்படுகின்றமையை வற்புறுத்திக்கூறுவது பயன்மிக்கதாகும். ஆனல் இவ்வுள்ளார்ந்த வளத்தை அடைவதன்பொருட்டு ஏற்றுமதி விலைகளில் ஏற்படும் குறுங்காலத்தளம்பல்களிலிருந்து பயர்ச்செய்கையாளர்களைப் பாதுகாப்பதற்கான வழிமுறைகளை மேற்கொள்வது முக்கியமானதொன்ருக தெரிகின்றது. சிறந்ததும் சுலபமானதுமான கொடுகடன் வசதிகள், களப்பணிகள், சந்தைப்படுத்தல் நிலையங்கள் ஆகியவற்றைக் கொண்டிருக்கும் அரசதுறைத் தனியார்துறைப் பெருந்தோட்டங்கள் இத்துறையை முன்னேற்றுவதற்கான மிக ஆற்றல் வாய்ந்த பங்கைச் செலுத்தத்தக்க விதத்தில் மிக முன்னேற்றமடைந்த நிலையைக் கொண்டிருக்கின்றன.

நெல்

பாதகமான காலநிலை காரணமாக 1982 பயிர்ச்செய்கை ஆண்டில் வீழ்ச்சியுற்ற நெல் உற்பத்தி 1983 பயிர்ச்செய்கை ஆண்டில் முன்னேற்றமடைந்தது. குடித்தொகை புள்ளிவிபரத் திணைக்களம் உற்பத்தி 24.7 இலட்சம் மெற்றிக் தொன்கள் என மதிப்பிட்டதோடு (1,185 இலட்சம் புசல் நெல் அல்லது 17 இலட்சம் மெற்றிக் தொன்கள் அரிசிக்குச் சமனுனது) இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 15 சதவீத அதிகரிப்பாகும். இம்முன்னேற்றத்திற்கு அதிக சராசரி விளைச்சலைத்தரும் பயிர்ச்செய்கை வழிமுறைகளை ஏற்றுக்கொண்டதும் பெரும்போக காலப்பகுதியில் பயிர்ச்செய்யப்பட்ட பரப்பின் அதிகரிப்பும் முதன்மையான காரணங்களாகும். மொத்த உற்பத்தியில் ஏறத்தாழ மூன்றில் இரண்டு பங்கிற்கு வகைகூறும் பெரும்போக உற்பத்தி 1983இன் முற்பகுதியில் ஏற்பட்ட வரட்சியினல் பாதிப்படையவில்லை.

1982/83இன் பெரும்போக நெல் உற்பத்தி 18 இலட்சம் மெற்றிக் தொன்களாக மதிப்பிடப்பட்டதோடு (850 இலட்சம் புசல்கள்) இது வரட்சியால் பாதிப்படைந்த முன்னைய ஆண்டின் பெரும்போக உற்பத்தியைப் பார்க்கிலும் 31 சதவீதத்தினுலும் சாதாரண பயிர்க்காலம் எனக் கொள்ளப்படக்கூடிய 1980/81 பெரும்போகத்தைப் பார்க்கிலும் 17 சதவீதத்தினுலும் அதிகரித்துக் காணப்பட்டது. இதுவே பெரும்போக காலத்தில் இதுவரை பெறப்பட்ட அதிகூடிய உற்பத்தி மட்டமாகும். எனினும் 1983 சிறுபோக உற்பத்தி முன்னைய ஆண்டு சிறுபோகத்திலும் பார்க்க 13 சதவீதம் குறைந்ததாகவே காணப்பட்டது. 1983 சிறுபோக உற்பத்தியின் குறிப்பிடத்தக்க வீழ்ச்சிக்கு பயிர்செய்யப்படத்தக்க நிலப்பரப்பில் கணிசமானளவு ஆண்டின் முன்னரைப்பகுதியில் நிலவிய

* 1982 பயிர்ச்செய்கையாண்டு 1981/82 பெரும்போகத்தையும் 1982 சிறுபோகத்தையும் உள்ளடக்கும்வேளையில் 1983 பயிர்ச்செய்கையாண்டு 1982/83 பெரும்போகத்தையும் 1983 சிறுபோகத்தையும் உள்ளடக்குகின்றது.

வரட்சியினால் பயன்படுத்தப்படமுடியாததாகவோ அல்லது பயிர் அழிந்தனவாகவோ காணப்பட்டதே காரணமாகும். முக்கிய நீர்த்தேக்கங்களில் கிடைக்கத்தக்க நீரின் மட்டம் மிகவும் கீழ்மட்டத்திற்கு வீழ்ச்சியடைந்ததன் விளைவால் சிறு போகப் பயிர்ச்செய்கை பாதிப்படைந்தது. தற்காலிகமான தரவுகளின்படி சிறு போக காலத்தில் பயிர்ச்செய்கைக்குட்பட்ட நிலப்பரப்பில் 13 சதவீதத்திற்கும் மேலான வீழ்ச்சி காணப்படுகின்றது.

அட்டவணை 1.15

நெல் புள்ளிவிபரங்கள் 1982 — 1983

| விடயம் | அலகு | 1982 | | | 1983(அ) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பெரும் போகம் | சிறு போகம் | மொத்தம் | பெரும் போகம் | சிறு போகம் | மொத்தம் |
| விதைக்கப்பட்ட மொத்தப் பரப்பளவு | '000 எக்டேயர்கள் | 568 | 277 | 845 | 583 | 242 | 825 |
| வளமாக்கி வழங்கல்கள் (ஆ) | '000மெ.தொன்கள் | 92 | 49 | 141 | 118 | 42 | 160 |
| வழங்கப்பட்ட கொடுகடன் | ரூ. ப. இ. | 100 | 22 | 122 | 119 | 26 | 145 |
| திருந்திய விதைகளின் கீழான பயிர்ச் செய்கை ... | '000 எக்டேயர்கள் | 515 | 248 | 763 | வி.கி. | வி.கி. | வி.கி. |
| மொத்த அறுவடை செய்யப்பட்ட பரப்பளவு ... | '000 எக்டேயர்கள் | 479 | 268 | 747 | 558 | 219 | 777 |
| எக்டேயருக்கான விளைச்சல் (இ) | கி. கிறும்கள் | 3,150 | 3,332 | 3,260 | 3,638 | 3,556 | 3,591 |
| தேறிய அறுவடை செய்யப்பட்ட பரப்பு | '000 எக்டேயர்கள் | 424 | 237 | 661 | 495 | 194 | 689 |
| உற்பத்தி ... | '000மெ.தொன்கள் | 1,363 | 793 | 2,156 | 1,786 | 691 | 2,477 |
| உ. வி. தி. கீழ் கொள்வனவு செய்யப்பட்டவை (எ) ... | ,, | 71 | 13 | 84 | 313 | 11 | 324 |
| இறக்குமதிகள் (நெல்லிற்குச் சமன்) ... | ,, | — | — | 229 | — | — | 176 |

மூலங்கள் : குடிமதிப்பு புள்ளி விபரத்திணைக்களம்;
வேளாண்மைத் திணைக்களம்; பேராதனை
வேளாண்மை அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சு;
நெற் சந்தைப்படுத்தும் சபை;
இலங்கை வளமாக்கிக் கூட்டுத்தாபனம்.
உணவு ஆணையாளர் திணைக்களம்.

(அ) தற்காலிகமானவை

(ஆ) பயிர்ச்செய்கை ஆண்டினதும்கலண்டர்ஆண்டினதும் வளமாக்கிவழங்கல்கள் அடிப்படையில்மாறுபட்டதாகும். கலண்டர் ஆண்டு சனவரி தொடக்கம் திசெம்பர் வரையாகும். பயிர்ச்செய்கை ஆண்டு பெரும்போகத்தையும் (செத்தெம்பர்/ஒற்ரோபர்–மாச்சு/ஏப்பிறல்). சிறுபோகத்தையும் (ஏப்பிறல்/மே–ஓகத்து/செத்தெம்பர்) உள்ளடக்கும்.

(இ) பெரும் போக சிறுபோகத்திற்கான எக்டேயர் ஒன்றின் விளைவு, குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்திலிருந்து பெற்ற தரவுகளைக் கொண்டு கணக்கிடப்படுகின்றது. அத்தரவுகள் பயிர் அறுவடை அளவீடுகள் அடிப்படையில் அமைந்தனவாகும். அதேவேளையில், மொத்த உற்பத்தியை அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பால் பிரிப்பதன் மூலம் மொத்த விளைவு கணக்கிடப்படுகிறது.

ஈ) ஓகத்திலிருந்து திசெம்பர் காலப்பகுதியில் சிறுபோகத்தில் அறுவடை கொள்வனவு செய்தவேளையில் சனவரியிலிருந்து யூலை காலப்பகுதியில் பெரும்போக நெல் அறுவடை கொள்வனவுசெய்யப்பட்டது.

எக்டேயர் ஒன்றுக்கான சராசரி விளைச்சல் 1982இன் 3,260 கிலோகிறும்களிலிருந்து (156 புசல்கள்) 1983இல் 3,595 கிலோகிறும்களுக்கு (172 புசல்கள்) அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. எக்டேயர் ஒன்றுக்கான 10 சதவீத அல்லது 331 கிலோக்கள்கொண்ட அதிகரிப்பு குறிப்பிடத்தக்கதொன்ருக விளங்குவதுடன் இது முக்கியமாக பெரும்போக காலத்தில் ஏற்பட்ட முன்னேற்றங்களின் விளைவாகவுமிருந்தது. 1982/83 பெரும்போகம் முழுவதற்குமான சராசரி விளைச்சல் முன்னைய பெரும்போகத்துடன் ஒப்பிடுகையில் 488 கிலோக்கிறும்

களால் (அல்லது 15 சதவீதம்) அதிகரித்தது. இக்காலப்பகுதியில் முதன்மை நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழுள்ள பகுதிகளின் சராசரி விளைச்சல் 19 சதவீதம் கொண்டதோர் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்தது. சிறிய நீர்ப் பாசன திட்டங்களின் கீழும் மழை வீழ்ச்சியுள்ள பகுதிகளிலும் சராசரி விளைச்சல் முன்னைய பெரும்போகத்துடன் ஒப்பிடுகையில் முறையே 12 சதவீதத்தாலும் 10 சதவீதத்தாலும் அதிகரித்தன. சராசரி விளைச்சலின் முன்னேற்றத்துக்கு வள மாக்கிப் பாவனை முன்னைய பெரும்போகத்துடன் ஒப்பிடுகையில் 28 சதவீதத்தால் அதிகரித்தமை வகைகூறுகிறது. வரட்சி நிலைமை ஏற்பட்டபோதிலும் சிறு போகத்தின் சராசரி விளைச்சல் முன்னைய சிறுபோகத்துடன் ஒப்பிடுகையில் 7 சத வீத அதிகரிப்பைப் பதிவுசெய்தது.

1983இல் நெல் விதைக்கப்பட்ட பரப்பளவு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடு கையில் 19,715 எக்டேயர்களால் (2 சதவீதம்) வீழ்ச்சியடைந்துள்ளது. இது முக்கியமாக 1983 சிறுபோகத்தில் விதைக்கப்பட்ட பரப்பளவில் ஏற்பட்ட 13 சத வீத வீழ்ச்சியின் விளைவாகும். 1982/83 பெரும்போகத்தில் பெரிய, சிறிய நீர்ப் பாசனத்திட்டத்தின் கீழ் பயிரிடப்பட்ட மொத்தப் பரப்பளவு முறையே 5,115 எக் டேயர்களாலும் (2 சதவீதம்) 6,080 எக்டேயர்களாலும் (5 சதவீதம்) அதிகரித் தன. இவ்வதிகரிப்புக்கள் பெரும்போக உற்பத்தியில் குறிப்பிடத்தக்களவு பங்கு கொண்டுள்ளன. மழைவீழ்ச்சியுள்ள பகுதிகள் பயிரிடப்பட்ட மொத்த அளவில் 2 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்தன. 1983இல் விதைக்கப்பட்ட பரப்பளவுக் கும் அறுவடை செய்யப்பட்ட பரப்பளவுக்கும் இடையேயுள்ள வேறுபாடு முன் னைய ஆண்டின் 98,650 எக்டேயர்கள் அல்லது மொத்த அளவின் 12 சதவீதத் துடன் ஒப்பிடுகையில் 47,484 எக்டேயர்கள் அல்லது 6 சதவீதமாகக் காணப் பட்டது. இருபோகங்களையும், தனித்தனியாக நோக்குகையில் 1982/83 பெரும் போகத்தில் வேறுபாடு 25,347 எக்டேயர்களாகவும் (விதைக்கப்பட்ட மொத்தப் பரப்பளவின் 4 சதவீதம்) சிறுபோகத்தில் 22,137 எக்டேயர்களாகவும் (விதைக்கப் பட்ட மொத்தப் பரப்பளவின் 9 சதவீதம்) விளங்கின.

1983 பயிர்ச் செய்கையாண்டில் நெற்றுறைக்கான வளமாக்கி வழங்கல் 18,555 மெற்றிக் தொன்களால் அதிகரித்தது. முன்னைய பயிர்ச் செய்கையாண்டுடன் ஒப் பிடுகையில் இது 13 சதவீத அதிகரிப்பைக் காட்டுகின்றது. 1982/83 பெரும்போகத் தில் வழங்கல்கள் 28 சதவீதத்தால் அதிகரித்தன. எனினும் 1983 சிறுபோகத்தில் முக்கியமாக வரட்சி அதிகளவில் பயிர்ச் செய்கையை பாதிப்படையச் செய்தமை யால் வழங்கல்கள் 14 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. 1983 மேயில் நடை முறைக்குவந்த வளமாக்கி விலையதிகரிப்பும் சிறுபோகத்தில் வழங்கலில் தாக்கத் தினை ஏற்படுத்தியது. விதைக்கப்பட்ட எக்டேயர் ஒன்றுக்கு வழங்கப்பட்ட வள மாக்கியின் சராசரி அளவு 1981/82 பெரும் போகத்தில் 162 கிலோகிரும்களிலி ருந்து 1982/83 பெரும் போகத்தில் 202 கிலோகிரும்களாக 25 சதவீதத்தால் அதிகரித்த வேளையில் சிறு போகத்திற்கான இவ்வெண்தொகை 1982இன் 177 கிலோக்கிரும்களிலிருந்து 1983இல் 174 கிலோக்கிரும்களாக 2 சதவீதத்தால் சிறி தளவில் வீழ்ச்சியடைந்தது.

1983இல் உத்தரவாத விலைத் திட்டத்தின் கீழ் நெற் சந்தைப்படுத்தும் சபை கொள்வனவு செய்த நெல் 323,887 மெற்றிக் தொன்களாகும். (160 இலட்சம் புசல்கள்) முன்னைய ஆண்டின் கொள்வனவுத் தொகையுடன் ஒப்பிடுகையில் இது ஏறத்தாழ நான்கு மடங்கு அதிகமானதாக விளங்குவதோடு கடந்த நான்கு ஆண்டுகளிலும் காணப்பட்ட வீழ்ச்சியடையும் போக்கிற்கு மாறாகவும் விளங்கியது. இதுவரை நெற் கொள்வனவில் நெற் சந்தைப்படுத்தும் சபையின் திறமையுடன் போட்டியிட்டுவந்த தனியார்துறை குறிப்பாக 1983இன் முதலரைப் பகுதில் சார்புரீதியில் அதே திறமையுடன் செயலாற்றுமாறு தூண்டுவதற்கான கவர்ச்சி குறைவாகவே விளங்குகின்றது.

1983 மாச்சிலிருந்து உத்தரவாத விலை ரூ. 57.50 இலிருந்து ரூ. 62.50 இற்கு உயர்த்தப்பட்டது. முன்னைய ஆண்டைப் போலவே உத்தரவாத விலையிலும் பார்க்க திறந்த சந்தை விலை தொடர்ந்தும் அதிகமானதாகவே இருந்தபோதும் உத்தரவாத விலைக்கும் திறந்த சந்தை விலைக்குமிடையேயான வேறுபாடு 1983இன் முன்னரைப் பகுதியில் முன்னைய ஆண்டின் இதே காலப் பகுதியில் காணப்பட்ட வேறுபாட்டினை விடக் குறைக்கப்பட்டதாகத் தோன்றுகின்றது. 1983இன் முன் அரைப் பகுதியிலும் பின்அரைப்பகுதியிலும் நெல்லின் சராசரி திறந்த சந்தை விலை முறையே ரூபா 71.00ஆகவும் ரூ. 79.00 ஆகவும் மதிப்பிடப்பட்டுள்ளது. பின்னரைப்பகுதியில் திறந்த சந்தை விலையின் ஒப்பீட்டு ரீதியிலான அதிகரிப்பு சிறுபோக அறுவடைவீழ்ச்சியைப் பிரதிபலிக்கின்றது. மேலே கூறப்பட்டகுறைந்த பரவலோடு, நீண்டகாலத்திற்கு கையிருப்பை வைத்திருக்கும் செலவின் அதிகரிப்பும் ஆண்டின் முதல் அரைப்பகுதியில் தனியார்துறையின் நெற்கொள்வனவின் பங்கை குறைத்திருப்பதற்கு உதவியிருக்கலாம்.

முன்னைய ஆண்டினைப் போலவே நெற் சந்தைப்படுத்தும் சபை அதன் கொள்வனவில் பெரும் பகுதியை (93 சதவீதம்) அம்பாறை, பொலனறுவை, அனுராதபுரம் போன்ற உலர் வலய மாவட்டங்களிலிருந்து பெற்றது. கொள்வனவில் மற்றுமொரு முக்கிய விடயம் முன்னைய ஆண்டின் பின்னரைப் பகுதியின் 16 சதவீத கொள்வனவிற்கு மாறாக இவ் ஆண்டின் பின் அரைப் பகுதியில் மொத்தக் கொள்வனவில் 3 சதவீதம் மாத்திரமே கொள்வனவு செய்யப்பட்டதாகும். 1983 சிறுபோகத்தில் அறுவடை வீழ்ச்சியடைந்தமை இக்குறைந்த சதவீதக் கொள்வனவுக்கு ஓரளவுக்கு வகைகூறும்.

ஆண்டின் பின்னரைப் பகுதியில் நெற் சந்தைப்படுத்தும் சபை அதன் கொள்வனவுக் கொள்கையில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய மாற்றங்கள் இவ்வீழ்ச்சிக்கான மற்றொரு காரணியாகும். தேசிய உணவுக் கொள்கைக் குழுவின் முயற்சியின் காரணமாக வேளாண்மையாளர்களிடமிருந்தும் கூட்டுறவு நிலையங்கள், வேளாண்மைப்பணி நிலையங்கள் ஆகியன தவிர்ந்த தனியார் முகவர்களிடமிருந்தும் நேரடிக் கொள்வனவுகளை மேற்கொள்ள நெற் சந்தைப்படுத்தும் சபை ஆர்வம் கொண்டிருக்கவில்லை. இக்கொள்கை மாற்றம் நெ. ச. சபை அதிகளவு நெல் இருப்பை இலாபத்தில் விற்க முடியாதிருந்ததும் பண்ணையிலேயே நேரடிக் கொள்வனவு செய்வதில் அலகொன்றிற்கான செலவு (புசலொன்றுக்கு ஏறத்தாழ ரூ. 71)

அதிகளவாக இருந்ததும் காரணமாகும். நெ. ச. சபை நடவடிக்கைகளை சீரமைப்பதற்கு 1983 இன் மத்தியில் மேற்கொண்ட மாற்றமும் தனியார்துறையை இந் நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபடத் தூண்டியதைப் பிரதிபலிக்கின்றது.

நெற் சந்தைப்படுத்தும்சபை தாங்கிருப்பு முகவர் நிலையமாக விளங்கும் அதன் தொழிற்பாட்டை நிறைவேற்றுவதற்கு தேவையான அளவு நெல் பெறப்பட முடியாத நிலையில் இருந்தால் ஒழிய தனியார் துறையுடன் போட்டியாக நெல் கொள்வனவைப் பெறுவதற்கு கடுமையான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டுமென எதிர்பார்க்கப்படவில்லை. தாங்கிருப்பு முகவர் நிலையமாக நெ. ச. சபை அதன் பங்கை திறமையாக மேற்கொள்வதற்கு நெற் சந்பைப்படுத்தும் சபையினதும் உணவு ஆணையாளர் திணைக்களத்தினதும் செயலாற்றங்களையும் ஒருங்கிணைக்கப்பட்ட அதிகார சபையின் கீழ் இணைத்தல் முக்கியமானதும் அவசரமானதுமான தேவையொன்ருகும். இவ்வாண்டில் நெற் சந்தைப்படுத்தும் சபை அதிகளவு தாங்கிருப்பை இலாபமான சந்தை வாய்ப்பின்றி வைத்திருந்தமைக்கு உணவு ஆணையாளர் திணைக்களத்திற்கும் நெ. ச. சபைக்கும் இடையே இணைப்பு மிகவும் ஒழுங்கற்றதாக இருந்தமை ஓரளவு காரணமாக இருந்ததுடன் இவை இரண்டிற்கும் இடையே இணைப்பொன்றினை ஏற்படுத்தும் முக்கியத்துவத்தை மீண்டும் வலியுறுத்தியது.

நெல் உற்பத்தி சுயதேவை மட்டத்தினை நோக்கி சென்றுகொண்டுள்ளதால் அரிசி ஏற்றுமதிக்கான வாய்ப்புக்களுக்கு அதிகளவு முக்கியத்துவம் வழங்கப்படுவது அவசியமானதாகும். இதற்கு வெளிநாட்டுச் சந்தைகளில் ஏற்றுக்கொள்ளத் தக்க வகைகளை திறமையாக கவனத்திற் கொள்ளவேண்டியது அவசியமானதொன்ருகத் தோன்றுகின்றது. மேலும் இறக்குமதி செய்யப்பட்ட கோதுமை மாவின் பாவனையை குறைக்கும் நோக்குடன் விலைகளில் ஏற்ற மாற்றங்களை செய்வதன் மூலம்கோதுமை மாவிற்குப் பதிலாக அரிசி மாவைப் பயன்படுத்துவதைப் படிப்படியாக ஊக்கப்படுத்துதல் நன்மைதரக் கூடியதொன்ருகும்.

**சீனி**

1983 இல் இலங்கைச் சீனிக் கூட்டுத்தாபனத்தின் சீனி உற்பத்தி (உணவு ஆணையாளரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட கழிவுசெய்யப்பட்டவற்றிலிருந்தான உற்பத்தி தவிர) 21,508 மெற்றிக் தொன்களாக மதிப்பிடப்பட்டு, 1982இன் உற்பத்தியுடனொப்பிடின் 6 சதவீத வீழ்ச்சியைக் கொண்டிருந்தது. இங்குரான தொழிற்சாலையில் உற்பத்தி 1 சதவீதத்தால் சிறிதளவு வீழ்ச்சியடைந்த வேளையில் கந்தளாய் தொழிற்சாலையின் உற்பத்தி 11 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இரு தொழிற்சாலைகளினதும் உற்பத்தியிலேற்பட்ட வீழ்ச்சிக்கு, பதனிடுவதற்கான கரும்பு வழங்கலில் காணப்பட்ட குறைவே காரணமாகும்.

இங்குரானவில் கரும்புச் செய்கையின் கீழான நிலப்பரப்பும் (பயிரிடப்பட்டதும் முளைவிட்டதுமான) அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பும் முறையே 10சதவீதத்தாலும் 9 சதவீதத்தாலும் அதிகரித்தன. எக்டேயர் ஒன்றுக்கான சராசரி விளைச்சலில் 5 சதவீத வீழ்ச்சி காணப்பட்ட நிலையிலும், அறுவடைசெய்

யப்பட்ட கரும்பின் தொகை 3 சதவீதத்தால் அதிகரித்தது. முன்னைய ஆண்டுகளைப் போலன்றி தனியார் கரும்பு வளர்ப்போரின் கரும்பு வழங்கல்களின் அளவு 14 சத வீதத்தால் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்ததுடன், 1983இல் இங்குரான தொழிற்சாலையில் பதனிடப்பட்ட கரும்பின் மொத்தத் தொகையில் 19 சதவீதத்திற்கு வகைகூறியது. 1982இல் இதன் தொடர்பானபங்கு 22 சதவீதமாயிருந்தது.

கந்தளாயில் கரும்புச் செய்கையின் கீழான நிலப்பரப்பு ஏறச்குறைய முன்னைய ஆண்டின் மட்டத்திலேயே 1983 இலும் காணப்பட்டது. எனினும் அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பு 8 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. எக்டேயர் ஒன்றுக்கான சராசரி விளைச்சல் 4 சதவீதத்தால் அதிகரித்தது. எனினும் கரும்பு உற்பத்தியில் அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பில் ஏற்பட்ட வீழ்ச்சியின் பாதகமான தாக்கத்தை எதிரீடு செய்வதற்குப் போதியதாயிருக்கவில்லை. இதன்விளைவாக 4 சதவீதத்தால் இது வீழ்ச்சியடைந்தது. தனியார்துறையிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட கரும்பு முன்னைய ஆண்டுகளைப்போலவே மிகவும் குறைவாகக் காணப்பட்டது.

முதன்மையான சீனி உற்பத்தி நாடுகளில் பெறப்படுவதைவிட மிகவும் குறைந்த வீதங்களில் சீனி பெறப்படுவதுடன் 1983இல் இது வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. கடந்த ஆண்டறிக்கையில் வலியுறுத்தப்பட்டது போன்று இரண்டு தொழிற்சாலைகளிலும் பயிர்ச் செய்கைகளிலும், பதனிடலிலும் அதிகரித்த ஆற்றலைப்பெற இன்னமும் இடமுண்டு.

தற்போது நாட்டில்சீனி உற்பத்தி முழுமையாக அரசுடைமைத் தொழில் முயற்சியாகக் காணப்படுவதுடன் இவ்விரு அரசுடைமைத் தொழிற்சாலைகளினதும் உற்பத்தி, நாட்டின் மொத்தத் தேவைகளில் ஏறக்குறைய 10 சதவீதத்தை ஈடுசெய்வதற்கு மட்டுமே போதியதாயிருந்தது. அரசதுறைப்பங்கேற்றலை அதிகரிப்பதன் மூலமும், கைத்தொழிலில் தனியார்துறை முதலீடுகளை கவருவதன் மூலமும் உற்பத்தியை அதிகரிப்பதற்காக பல வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. நாளொன்றுக்கு 1,250 தொன் கரும்பைப் பிழியக்கூடிய ஆரம்ப இயலளவு கொண்ட (நாளொன்றுக்கு 2,000 தொன்கள் கரும்பு அளவுக்கு விரிவடையும் தன்மை கொண்ட) புதிய அரசுடைமைத் தொழிற்சாலையொன்று ஆசிய அபிவிருத்திவங்கியின் (ஆஅவ) நிதியுதவியுடன் மொனராகலை மாவட்டத்தில் செவனகல என்னுமிடத்தில் அமைக்கப்பட்டுவருகிறது. இச்செயற்றிட்டம் ரூ. 12,280 இலட்சம் (520 இலட்சம் ஐ அ. டொலர்) செலவைக் கொண்டிருந்ததுடன் இதில் ரூ. 7,980 இலட்சம் (340 இலட்சம் ஐ. அ. டொலர்) கொண்ட தொகை ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து பெறப்படும். தனியார் முதலீடுகளைக் கவருவதற்கு அரசினுல் மேற்கொள்ளப்பட்ட ஊக்குவிப்புக்களுக்குச் சாதகமாக, புதிதாகக் கரும்பு செய்கை பண்ணுவதற்குப் பொருத்தமான அரசாங்கக் காணிகள் கிடைக்கக்கூடிய மொனராகலை மாவட்டத்தில் மூன்று புதிய சீனித் தொழிற்சாலைகளை அமைக்க மூன்று பன்னுட்டு நிறுவனங்கள் இணங்கின. இது தொழில்நுட்ப அடிப்படையிலான மாற்றங்களையும் நிதி சம்பந்தமான இணைவையும், உள்ளடக்கும் இச்செயற்றிட்டங்கள் ஒவ்வொன்றினதும் முக்கிய பண்புயாதெனில் ஒவ்வொன்றும் மையமாக அமைந்த தோட்டத்துடன், கரும்புச் செய்கையில் சிறு உடைமையாளர் கூறொன்றையும் உள்ளடக்கி யிருப்பதாகும்.

1983இல் உலகின் சீனி விலைகள் ஏறக்குறைய 20 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. வழங்கல்களில் ஏறக்குறைய 90சதவீதமானவை இறக்குமதி செய்யப்பட்டபோதிலும் பன்னாட்டு விலை அசைவுகளை உள்நாட்டுச் சந்தை விலைகள் பிரதிபலிக்கவில்லை. உள்ளூர் கைத்தொழிலைப் பாதுகாக்கும் வழிமுறையொன்றாக உற்பத்தியாளர் ஊக்குவிப்புக்களைப் பேணுவதற்கும், இத்துறையில் மேலதிக முதலீட்டை ஏற்படுத்துவதற்குமாக தீர்வைக் கொள்கை இதற்கேற்ப அமைக்கப்பட்டது.

நுகர்வுத் தேவைகளில் ஏறக்குறைய 10 சதவீதத்தை மட்டுமே உற்பத்தி செய்யும் உள்ளூர்க் கைத்தொழில் ஒன்றுக்காக இத்தகைய பாதுகாப்பு மட்டத்தின் கீழ் உற்பத்தியை விரைவுபடுத்துதலும் உயர்ந்தமட்ட உற்பத்தியினைப் பேணுதலுமாகிய பெரும் பொறுப்புக் காணப்படுகிறது. சீனிக் கூட்டுத்தாபனத்தின் உடைமையான பெருந்தோட்டங்களின் கரும்பு உற்பத்தியிலேற்பட்ட உறுதியான அதிகரிப்பு, கரும்புச் செய்கையில் தனியார்துறையின் அதிகரித்த பங்களிப்பு, சீனி பெறும் வீதங்களில் முன்னேற்றம் ஆகியனவே உள்ளூர் சீனிக் கைத்தொழிலில், கவனத்துக் கெடுக்கப்படும் முன்னுரிமைப் பட்டியலில் முக்கிய இடம்பெறும் விடயங்களாகும்.

**சிறு உணவுப்பயிர்கள்**

சிறு உணவுப் பயிர்கள் மீதான தரவுகள் குறைவாகக் காணப்பட்டதுடன், இவை மதிப்பீடுகளின் அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டன. இது ஆண்டு தோறும் ஏற்படும் அபிவிருத்திகளை ஆய்வு செய்வதைக் கடினமாக்கியது. பல சிறு உணவுப்பயிர்கள் வீட்டுத்தோட்டங்களில் பயிரிடப்பட்டமையினாலும், சிறு நில உடைமைகளில் அடிக்கடி கலப்புப் பயிர்களாக பயிரிடப்பட்டமையினாலும் பயிர்ச் செய்கையின் கீழான நிலப்பரப்பு பற்றியதும் உற்பத்தி பற்றியதுமான தரவுகளை முறைப்படி சேகரிப்பதும் கடினமாயிருந்தது. எனவே இப்பிரிவில் கொடுக்கப்பட்டுள்ள ஆய்வு தரவுகளின் நம்பகமற்ற தன்மையின் காரணமாக மட்டுப்படுத்தப் பட்டவையாக விளங்குகின்றன.

சின்ன வெங்காயம், பாசிப்பயறு, உழுந்து, உருளைக்கிழங்கு, தட்டைப்பயறு ஆகியவற்றின் கீழான நிலப்பரப்பு முன்னைய ஆண்டினைவிட குறிப்பிடத்தக்களவில் அதிகரித்ததாக தற்காலிகத்தரவுகள் காட்டுகின்றன. காய்கறி ஏற்றுமதிகளின் அளவும் 1983இல் பெருமளவான அதிகரிப்பைப் பதிவுசெய்தது. இப்பயிர்களுள் பெரும்பாலானவற்றின் உற்பத்தி இவ்வாண்டில் அதிகரிப்புக்களைப் பதிவு செய்ததாகக் காணப்படுகிறது. இத்துறைக்கான வளமாக்கி வழங்கல்களில் பதிவு செய்யப்பட்ட 24சதவீத அதிகரிப்பு இதனை எடுத்துக்காட்டுவதாகவே உள்ளது எனினும் மரவள்ளி, வத்தாளைக் கிழங்கு ஆகியவற்றின் கீழுள்ள நிலப்பரப்பு குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்த வேளையில் மிளகாய், எள்ளு ஆகியவற்றின் கீழான நிலப்பரப்பு ஏறக்குறைய முன்னைய ஆண்டின் மட்டத்திலேயே இருந்தது. சோயா அவரைச் செய்கையின் கீழ் இருந்த நிலப்பரப்பு, முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கு மாறாக 1983இல் 18 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தாக மதிப்பிடப்பட்டுள்ள வேளையில், சோளச் செய்கையின் கீழான நிலப்பரப்பின் வீழ்ச்சி 2 சதவீதமாக மதிப்பிடப்பட்டது. எனினும் கீழ் மட்ட விலைத்

திட்டத்தின் கீழ் நெற் சந்தைப்படுத்தற் சபையின் சோயாஅவரை, சோளம் ஆகிய கொள்வனவுகள் 1983இல் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தன. பன்னாட்டு விலைகள் வீழ்ச்சியடைந்து செல்லும் நிலையில் சோயா அவரைக்கு கீழ்மட்ட விலைத் திட்டத்தின் கீழ் சிறந்த விலைகள் வழங்கப்பட்டமை நெற் சந்தைப்படுத்தற் சபையினால் சோயா அவரை கொள்வனவு செய்யப்படுவதிலேற்பட்ட அதிகரிப்புக்குக் காரணமாக இருந்தது.

மகாவலி "எச்" பகுதியில் சிறு உணவுப்பயிர்களின் கீழ் குறிப்பாக மிளகாயின் கீழுள்ள நிலப்பரப்பு 1983 காலப்பகுதியில் அதிகரித்தது. 1983 சிறுபோகத்தில் நெற்செய்கைக்கு வேண்டிய நீர் பற்றாக்குறை காணப்பட்டதால், குறைந்த நீரை நுகரும் துணை உணவுப்பயிர்களுக்கு மாறவேண்டிய நிலைக்குள்ளாகினர். அத்துடன், மிளகாய், பம்பாய் வெங்காயம் போன்ற குறிப்பிட்ட சில பயிர்களின் உயர் இலாபத்தன்மையும், அத்தகைய பயிர்களின் செய்கைக்கு மாறவேண்டி வேளாண்மையாளர்களை ஊக்குவித்திருக்கலாம்.

கடந்த ஆண்டறிக்கையில் வலியுறுத்தப்பட்டவாறு சிறந்த விளைவுகளூடாக சிறு உணவுப்பயிர் உற்பத்தியின் விரிவு மேற்கொள்ளப்படவேண்டும். பயிர்ச் செய்கையின் கீழான நிலப்பரப்பிலேற்பட்ட அதிகரிப்புக் காரணமாக இதுவரையிலான உற்பத்தி பெருமளவில் விரிவாக்கப்பட்டது- அதிக அளவிலான பயிர்களின் நடைமுறைச் சராசரி விளைச்சல் மட்டங்கள், வாய்ப்பான மட்டங்களைவிட மிகக் குறைவாகக் காணப்பட்டதுடன் இப்பயிர்களின் செறிவான செய்கை சிறந்த விளைச்சலுக்கும், அதனால் உயர் உற்பத்திக்கும் வழிவகுத்தது. எனினும் முன்னேற்றமடைந்த பயிர்ச்செய்கை நடைமுறைகளை ஏற்றுக்கொள்ளல் சிறந்த விரிவாக்கப்பணிகளின் வழங்கல், கொடுகடன், சந்தைப்படுத்தல் வசதிகள், இலாபகரமான விலைகள் ஆகியவற்றில் அதிகளவுக்குத் தங்கியிருந்தது.

11 சிறு உணவுப் பயிர்களுக்கான ஆகக்குறைந்த விலைத்திட்டம் இவ்வாண்டுக் காலப்பகுதியில் தொடர்ந்தும் நடைமுறையில் இருந்தது. நெற் சந்தைப்படுத்தற் சபை இப்பயிர்களுள் 8 பயிர்களுக்கான கொள்வனவுத்திட்டத்தை தனது கொள்வனவுகளூடாக தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தியதுடன் சோளம், சோயா அவரை ஆகியவற்றின் கொள்வனவுகள் மட்டுமே குறிப்பிடத்தக்கதாகக் காணப்பட்டன. மிளகாய், சின்ன வெங்காயம், பம்பாய் வெங்காயம் ஆகியவற்றின் உற்பத்தியாளர்கள் தங்கள் உற்பத்தியை கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம் இலங்கைக் கூட்டுறவு சந்தைப்படுத்தல் அமைப்பு போன்ற நிறுவனங்களுக்கு கீழ்மட்ட விலைகளுக்கு மேலான விலையில் விற்கக் கூடியதாயிருந்தது. சிறு உணவுப்பயிர்களின் உற்பத்தியை ஊக்குவிப்பதில் கீழ்மட்ட விலைத்திட்டம் சாதகமான பங்கை வகித்ததாகக் காணப்பட்ட வேளையில் வெளிச்சந்தைகளுடனும் பன்னாட்டு விலைகளுடனும் ஒப்பிடுகையில் கீழ்மட்ட விலைகள் மிகவும் கவரத்தக்க வகையில் காணப்பட்டால் நெற் சந்தைப்படுத்தும் சபை மேலதிக கொள்வனவுகளைச் செய்யக்கூடிய நிலைமையேற்படலாம். ஏற்றுமதிக் கிராமத்திட்ட ஊக்குவிப்பின்கீழ் குறிப்பிட்ட சில உணவுப்பயிர்களின் செய்கை ஊக்குவிக்கப்பட்டமையும் சிறு உணவுப்பயிர் உற்பத்தியை அதிகரிக்கும் முக்கிய வழியொன்றாகக் காணப்படுகிறது.

**வளமாக்கி**

1983இல் வளமாக்கி வழங்கல்களின் மொத்த அளவு 1982இல் வழங்கப்பட்டதைவிட 25,700 மெற்றிக் தொன்கள் அல்லது 7 சதவீதம் அதிகமானதாக விளங்கியது. முன்னைய ஆண்டில் அவதானிக்கப்பட்ட நிலைமைக்கு அதிகளவு மாறானதாக நெல், சிறு ஏற்றுமதிப்பயிர்கள் நீங்கலாக எல்லாத்துறைகளுக்கும்

வளமாக்கி வழங்கல் அதிகரித்துள்ளது. தேயிலைத்துறை அதிகூடிய அதிகரிப்பான 12,800 மெற்றிக் தொன்களைப் பதிவுசெய்தவேளையில் தெங்குத்துறையும் இறப்பர் துறையும் முறையே 5,400 மெற்றிக் தொன், 2,000 மெற்றிக் தொன் அதிகரிப்புக்களைக் கொண்டிருந்தன. சிறு உணவுப்பயிர்களுக்கான வழங்கல் 3,200 மெற்றிக் தொன்களால் அதிகரித்தவேளையில் நெற்றுறைக்கானது இதற்குமாறாக 4,900 மெற்றிக் தொன்களால் வீழ்ச்சியடைந்தது.

வரட்சி நிலைமைகள் அதிகளவு பாதகமாக விளங்கிய இரண்டாம் காற்பகுதியில் தேயிலைத்துறைக்கான வளமாக்கி வழங்கல் கடுமையாக வீழ்ச்சியடைந்ததை காலாண்டுத்தரவு வெளிப்படுத்துகிறது. எனினும் ஏனைய காற்பகுதியில் வழங்கல்கள் இரண்டாம் காலாண்டின் வீழ்ச்சியினையும் எதிரீடு செய்யுமாறு அதிகரித்திருந்தன. மூன்றும், நாலாம் காலாண்டுகளில் அவதானிக்கப்பட்ட கூடியளவு அதிகரிப்புக்கள் சாதகமான காலநிலையினதும் தேயிலையின் கவர்ச்சிகரமான விலையினதும் விளைவாகும். இறப்பர் துறைக்கான வழங்கல்கள் எல்லாக் காலாண்டுகளிலும் அதிகரித்து விளங்கியபோதிலும் நான்காம் காலாண்டிலேயே அதிகூடிய அதிகரிப்புக் காணப்பட்டது. தெங்குத்துறைக்கான வழங்கல்கள் ஆண்டின் முதல் அரைப்பகுதியில் வீழ்ச்சியடைந்தவேளையில் பின்னரைப்பகுதியில் திருந்திய காலநிலையும் காய்களின் உயர்ந்த விலையும் வழங்கலை அதிகளவில் அதிகரிக்கச்செய்து முதல் அரைப்பகுதியின் வீழ்ச்சியையும் விஞ்சியது. நெல்லுக்கான வழங்கல்கள் முதல் அரைப்பகுதியில் சிறிதளவு அதிகரிப்பை பதிவுசெய்தவேளையில் மறுபகுதியில் வீழ்ச்சியைக் காட்டியது. (முன்னைய ஆண்டிலும் அவதானிக்கப்பட்ட பண்பாகும்.) இது ஆண்டில் பயன்படுத்தப்பட்ட அளவை ஏறத்தாழ 1982ஆம் ஆண்டைப்போலவே வைத்திருந்தது. 1983இல் காலாண்டு அடிப்படையில் பல்வேறு பயிர்களுக்கான வளமாக்கி வழங்கலின் பொதுவான அமைப்பு மிகவும் சீரற்ற வடிவத்தைக் கொண்டிருப்பதைச் சுட்டிக்காட்டுகின்றது. வேறுபட்ட பயிர்களை வேறுபட்ட விதத்தில் பாதித்த காலநிலையின் தாக்கம் இதற்கு ஓரளவு காரணமாகும். 1983 மேயில் நடைமுறைக்கு வந்த பலவகை வளமாக்கிக் கூறுகளின் விலை மாற்றங்களும் இந்நேரத்தில் அப்பயிர்த்துறைகளின் இருப்பு நிலைமையும் காலாண்டுப்படியான வளமாக்கி வழங்கல்களின் இச்சீரற்ற பகிர்ந்தளிப்பை தாக்கமடையச் செய்திருக்கலாம்.

அட்டவணை 1.16

**பயிர்களின்படியான வளமாக்கி வழங்கல்கள் 1980—1983**

'000 மெற்றிக் தொன்கள்

| பயிர் | 1980 | 1981 | 1982 | 1983 (அ) |
|---|---|---|---|---|
| 1. நெல் ... | 190.0 | 155.6 | 167.1 | 162.2 |
| 2. தேயிலை ... | 109.9 | 103.3 | 102.7 | 115.5 |
| 3. இறப்பர் ... | 22.0 | 16.8 | 16.5 | 18.5 |
| 4. தெங்கு ... | 55.8 | 37.7 | 30.3 | 35.7 |
| 5. சிறு உணவுப் பயிர்கள் . | — | 14.8 | 13.5 | 16.7 |
| 6. சிறு ஏற்றுமதிப் பயிர்கள் .. | — | 3.2 | 2.3 | 2.1 |
| 7. ஏனையவை ... | 62.0(ஆ) | 34.9 | 47.0 | 54.4 |
| மொத்தம் | 439.7 | 366.3 | 379.4 | 405.1 |

மூலங்கள் : இலங்கை வளமாக்கிக் கூட்டுத்தாபனம்,
தேசிய வளமாக்கிச் செயலகம்.

(அ) தற்காலிகமானவை

(ஆ) சிறு உணவுப் பயிர்கள் சிறு ஏற்றுமதிப் பயிர்த்துணைத்துறைகள் ஆகியவற்றுக்கான வளமாக்கி வழங்கல்களையும் உள்ளடக்கும்.

1982ஆம் ஆண்டுப்பகுதியில் மாற்றமில்லாது விளங்கிய வளமாக்கி விலைகள் உலகச்சந்தையில் வளமாக்கிச்செலவின் மாற்றங்களினதும் செலாவணி வீத மாற்றங்களினதும் விளைவால் 1983 மேயில் திருத்தியமைக்கப்பட்டது. இத்திருத்தம் வரவுசெலவுத்திட்ட ஒதுக்கான ரூ. 10,000 இலட்சங்களுக்குள்ளேயே வளமாக்கி உதவுதொகையினை கட்டுப்படுத்துவதற்கான ஒரு முயற்சியாகும். அமோனியம் சல்பேற்று, பொற்ருசியம் முறியேற்று ஆகியவற்றின் விலைகள் முறையே 16 சத வீதத்தாலும், 5 சதவீதத்தாலும் குறைக்கப்பட்டன. எனினும் ஏனைய கலவை ஆக்கக்கூறுகளின் விலை 2 சதவீதத்திற்கும் (யூரியா) 26 சதவீதத்திற்கும் (என்.பி கே.) இடையே அதிகரிக்கப்பட்டன. எனினும் 1982இல் வெவ்வேறுஇன வகையான பயிர்த்துறைகளில் பயன்படுத்தப்பட்ட ஒவ்வொரு வகை வளமாக்கியினதும் சார்புப்பங்கின் அடிப்படையில் கணிக்கப்பட்ட சராசரி விலைகள் பயிர்த்துறை இத்திருத்தத்தின் காரணமாக நெற்பயிர்துறை ஏறத்தாழ 5 சதவீத அதிகரிப்பைக் காட்டியவேளையில் தேயிலை, தெங்குத்துறைகள் முறையே 7 சதவீத, 2 சதவீத விலை வீழ்ச்சியைப் பதிவுசெய்தன. அத்துடன் பெருந்தோட்டப்பயிர்களின் விலைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பின் காரணமாக பெருந்தோட்டத்துறையின் வளமாக்கிப் பயன்பாட்டில் சாதகமான தாக்கம் இவ்வாண்டில் ஏற்பட்டது. கடுமையான வரட்சி நிலவியிருக்காவிட்டால் இவ்வாண்டில் பெருந்தோட்டத் துறை இன்னும் அதிகளவு வளமாக்கியைப் பயன்படுத்தியிருக்கும்.

அட்டவணை 1.17

**வளமாக்கி விலைகள்**

மெற்றிக் தொன்னென்றுக்கான ரூபா

| வளமாக்கி வகை | 16.9.81 இலிருந்து நடைமுறைக்கு வந்த விலைகள் | 04.05.83 இலிருந்து நடைமுறைக்கு வந்த விலைகள் |
|---|---|---|
| யூரியா ... | 2,785 | 2,850 |
| அமேனியம் சல்பேட் ... | 4,270 | 3,600 |
| முக்சிறப்பு பொசுபேற் .. | 2,685 | 2,850 |
| பாறைப் பொசுப்பேற் .. | 1,635 | 2,000 |
| என். பி. கே. 5: 15: 15 ... | 2,785 | 3,000 |
| பொட்டாசியம் மூறியேற் ... | 2,900 | 2,750 |

மூலம் : தேசிய வளமாக்கிச் செயலகம்.

குறிப்பு: 1982ஆம் ஆண்டுப் பகுதியில் விலைகள் திருத்தப்படவில்லை.

சப்புகஸ்கந்தயில் உள்ள அரசிற்குச் சொந்தமான யூரியா தொழிற்சாலையின் உற்பத்தி 1982 உடன் ஒப்பிடுகையில் 85,889 மெற்றிக் தொன்களால் (41 சத வீதம்) அதிகளவில் வீழ்ச்சியடைந்தது. இவ்வீழ்ச்சிக்கு முக்கியமாக முன்னரைப் பகுதியில் உற்பத்தியைப் பாதிக்கச்செய்த பொறிகள் அடிக்கடி பழுதடைந்தமையும் ஒற்ருேபரிலிருந்து நவெம்பர் நடுப்பகுதி வரை பேணல் வேலைகளுக்காக பொறிகள் முற்ருக மூடப்பட்டிருந்தமையும் காரணமாகும். 1983இல் எப்பாவலை பாறைப்பொசுபேற்று தொழிற்சாலையின் பாறைப்பொசுபேற்றின் உற்பத்தி 15,726 மெற்றிக் தொன்னுக விளங்கியது.

பிராந்திய வளமாக்கிக் களஞ்சியத் தொகுதிகளின் அவசியம் வலியுறுத்தப்பட்டதன் பயனுக வளமாக்கியின் மொத்த விற்பனைப் பகிர்ந்தளிப்பு கணிசமான முன்னேற்றத்தைக் காட்டியது பொலனறுவை களஞ்சியசாலை கட்டிமுடிக்கப்பட்டதோடு அனுராதபுரம், வெலிகம களஞ்சியசாலைகள் முடிவடையும் தறுவாயில் உள்ளன. அடுத்தாண்டில் இக்களஞ்சியசாலைகள் வளமாக்கி வழங்கலை அந்தந்தப் பகுதிகளுக்கு வழங்குவதைத் தொடங்கும். வளமாக்கி வழங்கலை சில்லறை மட்டத்திற்கும் கொண்டுவருவதற்கு உள்நாட்டு, வெளிநாட்டு கூட்டுக்களுடன் தொடங்கப்பட்ட வேலையும் சில்லறை வளமாக்கி களஞ்சியங்களை நாட்டின் பல்வேறு பகுதிகளில் சேர்மன் கூட்டாட்சிக் குடியரசினதும் உணவு வேளாண்மை நிறுவனத்தினதும் உதவியுடன் கட்டியமையும் 1983இல் நல்ல முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. இந்நடவடிக்கைகளின் தாக்கங்கள் பண்ணை மட்டத்தில் வளமாக்கி வழங்கல்களிலும் கிடைத்தலிலும் விரைவில் உணரக்கூடியனவாக இருக்கும்.

### மீனும் கால்நடையும்

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீன் உற்பத்தி 1983இல் 218,500 மெற்றிக் தொன்களென கடற்றொழில் அமைச்சு தற்காலிகமாக மதிப்பிட்டதோடு இது 2 சதவீதமான சிறிதளவான அதிகரிப்பாகவும் இருந்தது. இம்முன்னேற்றம் எல்லாத் துணைத்துறைகளிலும் காணக்கூடியதாக இருந்ததோடு இது குறிப்பாக முன்னைய ஆண்டிலும் பார்க்க 8 சதவீதத்தால் உற்பத்தி அதிகரித்த உள்நாட்டு கடற்றொழில் துறையில் காணப்பட்டது. தற்பொழுதுள்ள உள்ளார்ந்த வளத்தைக் கணிக்கையில் உள்நாட்டுக் கடற்றொழில் துறையின் அபிவிருத்தியில் கடந்த இரண்டாண்டுகளில் கணிசமானளவு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

எனினும் நாட்டின் மொத்த மீன் உற்பத்தியில் ஏறத்தாழ 80 சதவீதத்திற்கு வகைகூறும் கரையோரத்துறையின் செயலாற்றம் தொடர்ந்தும் குறைவாகவே விளங்கியதோடு 1983இல் உற்பத்தி 1 சதவீதத்தால் மட்டுமே சிறிதளவால் அதிகரித்துள்ளது. 1983இல் கரையோர மீன் உற்பத்தி 1979—1983 ஐந்தாண்டுக் கடற்றொழில் முதன்மைத் திட்டத்தின்கீழ் மதிப்பிடப்பட்ட (216,000 மெற்றிக் தொன்கள்) தொகையிலும் 16 சதவீதம் குறைவானதாகவே விளங்கியது. கரையோர மீன் உற்பத்தியில் ஏறத்தாழ 70 சதவீதத்திற்கு பொறிமயப்படுத்தப்பட்ட கலங்கள் வகைகூறுவதால் எரிபொருள் செலவு உற்பத்தியில் பாதகமான தாக்கத்தினைக் கொண்டுள்ளதாக தோன்றுகின்றது. எனினும் மீனின் உற்பத்தியாளர் விலைகளின் அதிகரிப்பினையும் வட மேற்குக் கரையோரக் கடற்றொழில் அபிவிருத்திச் செயற்றிட்டம், மேற்குக் கரையோர கடற்றொழில் செயற்றிட்டம் போன்ற பல சிறப்புச் செயற்றிட்டங்களின்கீழ் கரையோரக் கடற்றொழில்துறையில் அதிகளவிலான நிதியங்கள் முதலிடப்படுவதையும் நோக்குகையில் கரையோர கடற்றொழில் துறை திறமையற்ற செயலாற்றத்திற்கு உயர் எரிபொருள் செலவுகள் மாத்திரம் காரணமாக முடியாது. கரையோரத் துறையின் உற்பத்தி வளர்ச்சியின் மீதான கட்டுப்பாடுகளைத் தீர்ப்பதன்பொருட்டு இவற்றை விரைவில் இனங்காண வேண்டியது முக்கியமானதாகும்.

1983இல் புதிய படகுகளை வழங்குவதற்கும் உள்நாட்டு கலங்களைப் பொறி மயப்படுத்துவதற்குமான மொத்த உதவுதொகை 1982இன் ரூ. 390 இலட்சங்களிலிருந்து ரூ. 240 இலட்சங்களுக்கு வீழ்ச்சியடைந்தது'இதில் ரூ. 100 இலட்சம் உள்நாட்டு நன்னீர் துறைக்கும் மீதி நீர்க்கலத்துறைக்கும் வழங்கப்பட்டன. இவ்வாண்டில் இரு அரச வர்த்தக வங்கிகள் கரையோர மாவட்டங்களின் கடற்றொழிலாளர்களுக்கான கொடுகடன் திட்டத்தினை தொடர்ந்தும் மேற்கொண்டன. இத்திட்டத்தின்கீழ் கடற்றொழில் படகுகள், பொறிகள், கருவிகள் ஆகியவற்றின் கொள்வனவிற்காக கடன்கள் வழங்கப்பட்டன. மத்திய வங்கியிலிருந்தான மீள் நிதியிடல் வசதிகளும் கிடைக்கத்தக்கனவாகவிருந்தன. எனினும் பழைய கடன்களை மீளச்செலுத்தாமையின் உயர்வான அதிகரித்த வீதம் இத்திட்டத்தின் கீழ் எதிர்காலத்தில் கடன் வழங்கலை ஆபத்தானதாக்கலாம்.

மொத்த உற்பத்திச்செலவில் வலுச்செலவின் அதிகரித்துவரும் முக்கியத்துவம் நாட்டின் கடற்றொழில்துறை எதிர்நோக்கும் ஒரு பிரச்சனையாக இனங்காணப்பட்டுள்ளது. எனவே கடற்றொழில் அபிவிருத்திக்கொள்கை குறைவான வலுப்பாவனை முறைகளையே அடிப்படையாகக் கொள்ள வேண்டுமென்பதை விளக்குகிறது. வலுப்பாவனையில் சிக்கனத்திற்கு வழிவகுக்கும் உள்நாட்டு நன்னீர் மீன்பிடித்தொழில் அபிவிருத்தி செய்வதோடு பொறிமயப்படுத்தப்பட்ட கலங்களின் அறிமுகப்படுத்தலினால் வீழ்ச்சியடைந்து தற்சமயம் நாட்டின் மொத்த மீன் உற்பத்தியில் 5 சதவீதத்திற்கு மட்டுமே வகைகூறும்கரைவலை மீன்பிடிக்கு புத்தூக்கம் அளிப்பதற்கும் 1983இல் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன, தொடக்கச் செலவுகள், திருத்தச் செலவுகள், கடற்றொழில் கலங்களினதும் வலைகளினதும் மாற்றி அமைக்கும் செலவுகள் ஆகியவற்றுக்காகவும் கரைவலைக் கடற்றொழிலாளருக்கு வழங்குவதற்காக அரசுக்குச் சொந்தமான வங்கிகளுடன் கொடுகடன் திட்டமொன்றை வகுத்தமை அப்படியானதொரு நடவடிக்கையாகும்.

ஆண்டின் முடிவில் ஏறத்தாழ 25,000 உறுப்பினர்களைக் கொண்டதாக மதிப்பிடப்படும் 91 கடற்றொழில் கூட்டுறவு நிலையங்கள் விளங்கின. எனினும் அதிகமான கூட்டுறவு நிலையங்கள் அமைப்பு ரீதியாக பலம் வாய்ந்தனவாக இல்லாமையால் அவற்றின் உள்ளமைப்பு, தொழிற்படும் வழிமுறைகள் ஆகியன அரசின் மீளாய்வுக்கு உட்பட்டதாக விளங்குகின்றன,

குடித்தொகைப் புள்ளிவிபரத் திணைக்களம் 1983இல் பால் உற்பத்தி (எருமைப் பால் உட்பட) 4,190 இலட்சம் லீற்றர்களாக தற்காலிகமாக மதிப்பிடப்பட்டதோடு இது முன்னைய ஆண்டின் உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் 4 சதவீத அதிகரிப்பாகவும் இருந்தது. தேசிய பாற்சபை மாட்டுத்தீன் முக்கியமாக பிண்ணாக்கின் விலையுயர்வால் அதிகளவு பாதிக்கப்படும் உற்பத்தியாளர்களுக்கு போதியளவு இலாபத்தினை உறுதிப்படுத்தும் பொருட்டு பாலுக்குக் கொடுக்கப்படும் உற்பத்தியாளர் விலைகளை 1983 மாச்சில் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது. எனினும் 1983இல் தேசிய பாற்சபையால் சேகரிக்கப்பட்ட பாலின் அளவு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 539 இலட்சம் லீற்றர்களாக 2 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

கால்நடைக் கைத்தொழில் அபிவிருத்தி செய்யும் முயற்சி இவ்வாண்டில் மேலும் விரிவாக்கப்பட்டது. கிடைக்கத்தக்க வழமையான நிகழ்ச்சித்திட்டங்களுடன் (தொற்றுநோய் தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்களுடன் கால்நடை வளர்ப்பாளர்களுக்கு கால்நடை மருத்துவம் வழங்கல்) பல புதிய செயற்றிட்டங்கள் தொடக்கப்பட்டன. நான்கு உலர் வலய மாவட்டங்களிலுள்ள குடியேற்றத் திட்டங்களிலும் 'புறன' கிராமங்களிலும் பாற்பண்ணை கைத்தொழில் அபிவிருத்தியை இலக்காகக்கொண்ட இலங்கை/சுவிஸ் கால்நடை அபிவிருத்தித்திட்டத்தை தொடர்ந்தும் நடாத்துவதற்கு சுவிஸ் அரசு 1983இல் மேலதிகக் கொடைகளாக ரூ. 150 இலட்சத்தை வழங்கியது. ஆண்டின் தொடக்கத்தில் மேற்கு சேர்மன் அரசின் நிதியிலிருந்து ஆட்டு வளர்ப்பு அபிவிருத்தித்திட்டம் ஒன்று தொடங்கப்பட்டது. இச்செயற்றிட்டம் 9 மாவட்டங்களை[1] உள்ளடக்குகின்றது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் ரூ. 4,000 இலட்சம் மதிப்பிடப்பட்ட செலவுள்ள மற்றுமொரு பெரிய அளவிலான செயற்றிட்டமொன்று 1983 யூனில் தொடங்கப்பட்டது. இச்செயற்றிட்டம் 10 மாவட்டங்களை[2] உள்ளடக்கி பாலுற்பத்திகள், சுமைவலு, மாட்டு இறைச்சி உற்பத்தி ஆகியவற்றினை அபிவிருத்தி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. பாற் சந்தைப்படுத்தலுக்கு வசதியளிப்பதற்காக இச்செயற்றிட்டங்களின்கீழ் பாற்பண்ணை அபிவிருத்தி கூட்டுறவு நிலையங்களும் நிறுவப்படவிருக்கின்றன.

குடித்தொகைப் புள்ளிவிபரத் திணைக்களம் 1983இன் முட்டை உற்பத்தி 5,670 இலட்சங்களாக தற்காலிகமாக மதிப்பீடு செய்துள்ளதோடு இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 9 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்தது.

விலங்குத்தீன் உற்பத்தி மீதான தரவு கிடைக்கத்தக்கதாகவில்லை. இலங்கை எண்ணெய் கொழுப்புக் கூட்டுத்தாபனம், அரசுடைமையாக்கப்பட்ட பிரித்தானிய இலங்கைக் கூட்டுத்தாபனம் ஆகிய இரு முக்கிய அரசதுறை உற்பத்தியாளர்களிடமிருந்து கிடைக்கப்பெறும் தரவுகள் மாட்டுத்தீன் உற்பத்தி 1982இன் 12,597 மெற்றிக் தொன்களிலிருந்து 1983இல் 7,040 மெற்றிக் தொன்களாக 44 சதவீதத்தால் கணிசமானளவால் வீழ்ச்சியடைந்ததை காட்டுகின்றது. மாறாக இந்நிறுவனங்களினாலான கோழித்தீன் உற்பத்தி 1982இன் 52,100 மெற்றிக் தொன்களிலிருந்து 1983இல் 61,140 மெற்றிக் தொன்களாக 17 சதவீதத்தால் அதிகரித்தது.

### கிராமியக் கொடுகடன்

கிராமியத் துறைக்கான கொடுகடன் வசதிகள் பல்வகைத் திட்டங்களின் கீழ் வழங்கப்படுகின்றன. இலங்கை வங்கியும், மக்கள் வங்கியும் இத்துறைக்கு கொடுகடன் வழங்கும் முக்கிய நிறுவனங்களாக விளங்கின. இலங்கை வங்கி அதன் கிராமிய கொடுகடனில் பெரும் பகுதியை வேளாண்மைப் பணி நிலையங்களிலுள்ள

1. கம்பகா, புத்தளம், குருநாகல, மன்னார், அனுராதபுரம், திருகோணமலை, யாழ்ப்பாணம். வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களாகும்.
2. மாத்தறை, காலி, களுத்துறை, கொழும்பு, கம்பகா, கேகாலை, புத்தளம், குருநாகல், மன்னார், யாழ்ப்பாணம்.

அதன் துணை அலுவலகங்களின் மூலமாக வழிப்படுத்தும் வேளையில் மக்கள் வங்கி அதனுடன் சார்ந்த கூட்டுறவு கிராமிய வங்கிகளின் மூலமாக அதன் கொடுகடனின் கணிசமானளவு பங்கை பகிர்ந்தளிக்கின்றது. அட்டன் நசனல் வங்கியும் கிராமியத் துறைக்கு கடன் வழங்கிவருகின்ற போதிலும் இத் துறைக்கான அதன் வழங்கல் நடவடிக்கைகள் குறிப்பிட்ட சில திட்டங்களுக்கும் பகுதிகளுக்கும் மட்டுமேயாகும். 1983இல் வெளிநாட்டு வங்கியான இந்தியன் ஓவசீஸ் வங்கியும் மாத்தறை மாவட்டத்தில் சில புதிய வழிமுறைகளைக் கொண்ட கிராமிய கொடுகடன் வழங்கல் நிகழ்ச்சித் திட்டம் ஒன்றைத் தொடங்கியது. இந்திய அரச வங்கியும் வேளாண்மை மாவட்டமான அனுராதபுரத்தில் கிளையொன்றை தொழிற்படுத்துகின்றது. எனினும் மக்கள் வங்கி, கிராமிய வங்கிகள், வேளாண்மைப் பணி நிலைய துணை அலுவலகங்களை உள்ளடக்கிய இலங்கை வங்கி, அட்டன் நெசனல் வங்கி ஆகியவற்றினுல் மத்திய வங்கியின் பெயரளவிலான வட்டி வீதத்தில் தொடர்ந்தும் வழங்கிவரும் மீள் நிதியிடல் வசதிகளைக்கொண்ட ஒன்றிணைக்கப்பட்ட கிராமிய கொடுகடன் திட்டத்தின் வழங்கப்பட்ட கடன்களையே இவ்வறிக்கை முக்கியமாக உள்ளடக்குகின்றது.

ஒன்றிணைக்கப்பட்ட கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழ் பங்கு பற்றும் எல்லா வங்கிகளினுலும் வழங்கப்பட்ட கடன்களின் மொத்தத்தொகை 1982 பயிர்ச் செய்கை ஆண்டில் ரூ. 1,451 இலட்சங்களில் இருந்து 1983* பயிர்ச் செய்கை ஆண்டில் ரூ. 1,681 இலட்சங்களாக 16 சதவீதத்தினுல் அதிகரித்தது. ஒன்றிணைக்கப்பட்ட கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழ் சம்பந்தப்பட்ட வங்கிகளினுல் வழங்கப்பட்ட தொகைகளை ஒப்புநோக்குகையில் இலங்கை வங்கி அதியுயர் அதிகரிப்பான 27 சதவீத அதிகரிப்பையும் மக்கள் வங்கி 22 சதவீத அதிகரிப்பையும் கொண்டிருந்தவேளையில் அட்டன் நசனல் வங்கியின் சார்புரீதியான பங்குகள் 18 சத வீதத்தால் வீழ்ச்சியடைந்தன. மொத்தக் கடன் வழங்கலில் மக்கள் வங்கியின் சார்பான பங்கு 1982 இன் 42 சத வீதத்திலிருந்து 1983இல் 44 சதவீதத்திற்கு (ரூ. 738 இலட்சம்) சிறிதளவால் அதிகரித்தது. இவ்வாறே இலங்கை வங்கியின் சார்பான பங்கும் முன்னைய பயிர்ச் செய்கையாண்டின் 38 சதவீதத்திலிருந்து 1983இல் 42 சதவீதத்திற்கு (ரூ. 702 இலட்சம்) சிறிதளவால் அதிகரித்த வேளையில் அட்டன் நசனல் வங்கியின் பங்கு 20 சதவீதத்திலிருந்து 14 சதவீதத்திற்கு (ரூ. 243 இலட்சம்) வீழ்ச்சியடைந்தது. ஒன்றிணைக்கப்பட்ட கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மொத்தக் கடன் தொகை முன்னைய ஆண்டிலும் பார்க்க அதிகரித்தமைக்கு 1982/83 பெரும் போகத்தில் நெற் பயிர்செய்கைக்கு வழங்கப்பட்ட கடன் வழங்கலின் அதிகரிப்பே முக்கிய காரணமாகும்.

ஒன்றிணைக்கப்பட்ட கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழ் 1983 பயிர்ச் செய்கை ஆண்டில் நெற் பயிர்ச் செய்கைக்கு வழங்கப்பட்ட மொத்தக்கொடுகடன் கடந்த ஆண்டில் வழங்கப்பட்ட ரூ. 1,222 இலட்சத்திலிருந்து ரூ. 1.460 இலட்சமாக 20 சதவீதத்தால் அதிகரித்து 1982 இல் அவதானிக்கப்பட்ட நிலைமையில் மேலும் முன்னேற்றத்தைக் காட்டியது. ஒன்றிணைக்கப்பட்ட கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மொத்தத் தொகையில் நெற் கடன்கள் முன்னைய ஆண்டின் 84 சதவீதத்திற்கு மாருக 1983 இல் 87 சதவீதத்தைக் கொண்டிருந்தது.

---

* 1982 பயிர்ச் செய்கையாண்டு 1981/82 பெரும் போகத்தையும் 1982 சிறு போகத்தையும் உள்ளடக்கும் வேளையில் 1983 பயிர்ச் செய்கையாண்டு 1982/83 பெரும் போகத்தையும் 1983 சிறு போகத்தையும் உள்ளடக்கும்.

அட்டவணை 1.18

## அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின்கீழ் பயிர்ச்செய்கைக்கு வழங்கப்பட்ட கொடுகடன்கள்

*(1983 திசெம்பர் 31இல் உள்ளபடி)*

ஆயிரம் ரூபாய்களில்

| | மக்கள் வங்கி | | | இலங்கை வங்கி | | | அட்டன் நசனல் வங்கி | | | மொத்தக் கடன்கள் | | கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மொத்தக் கடன்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நெல் | சிறு உணவுப் பயிர்கள் | மொத்தக் கடன்கள் | நெல் | சிறு உணவுப் பயிர்கள் | மொத்தக் கடன்கள் | நெல் | சிறு உணவுப் பயிர்கள் | மொத்தக் கடன்கள் | நெல் | சிறு உணவுப் பயிர்கள் | |
| பெரும் போகம், 1981/82 | 47,048 | 5,776 | 52,824 | 32,488 | 8,250 | 40,738 | 20,840 | ... | 20,840 | 100,376 | 14,026 | 114,402 |
| சிறு போகம், 1982 | 6,363 | 1,274 | 7,637 | 6,887 | 7,482 | 14,369 | 8,526 | 184 | 8,710 | 21,776 | 8,940 | 30,716 |
| பயிர்ச்செய்கையின் ஆண்டு, 1982 | 53,411 | 7,050 | 60,461 | 39,375 | 15,732 | 55,107 | 29,366 | 184 | 29,550 | 122,152 | 22,966 | 145,118 |
| பெரும் போகம், 1982/83 | 50,601 | 3,761 | 54,362 | 44,850 | 9,648 | 54,498 | 24,252 | ... | 24,252 | 119,703 | 13,409 | 133,112 |
| சிறு போகம் 1983 | 16,762 | 2,628 | 19,390 | 9,515 | 6,146 | 15,661 | — | — | — | 26,277 | 8,774 | 35,051 |
| பயிர்ச்செய்கையின் ஆண்டு, 1983* | 67,363 | 6,389 | 73.752 | 54,365 | 15,794 | 70,159 | 24,252 | ... | 24,252 | 145,980 | 22,183 | 168,163 |

*தற்காலிகத் தரவுகள்

மூலங்கள்: மக்கள் வங்கி;
இலங்கை வங்கி;
வரையறுக்கப்பட்ட அட்டன் நசனல் வங்கி.

மக்கள் வங்கி அதன் நெற் கடன்களை 1982இன் ரூ. 534 இலட்சத்திலிருந்து 1983இல் ரூ. 674 இலட்சத்திற்கு 26 சதவீதத்தால் அதிகரித்த வேளையில் இலங்கை வங்கி 1982இல் ரூ. 394 இலட்சத்திலிருந்து 1983இல் ரூ. 544 இலட்சத்திற்கு 38 சதவீதத்தால் அதிகரித்தது. எனினும் ஒன்றிணைக்கப்பட்ட கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழ் அட்டன் நெசனல் வங்கியின் நெற் கடன்களின் பங்கு 1982இன் ரூ. 294 இலட்சத்திலிருந்து 1983இல் ரூ. 243 இலட்சத்திற்கு 17 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

ஒன்றிணைக்கப்பட்ட கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழ் 1983 பயிர்ச் செய்கை ஆண்டில் நெற் பயிர்ச் செய்கைக்கு வழங்கப்பட்ட மொத்தக் கடனில் பெரும் போகக் கடன்கள் ரூ. 1,197 இலட்சமாக அல்லது மொத்தத்தில் 90 சதவீத மாக விளங்கியது. முன்னைய பெரும்போகத்தில் வழங்கப்பட்ட தொகையை விட இது 19 சதவீதம் அதிகமானதாகும். மக்கள் வங்கி ரூ. 506 இலட்சத்தையும் (மொத்த பெரும்போக நெற் கடன்களில் 42 சதவீதம்) இலங்கை வங்கி ரூ. 449 இலட்சத்தையும் (38 சதவீதம்) வழங்கின. மிகுதி ரூ. 243 இலட்சத்திற்கு அட்டன் நெசனல் வங்கி வகைகூறியது. பயிர்ச் செய்கை வரட்சியினால் பாதிக்கப்பட்ட போதிலும் 1983 சிறு போகத்தில் நெற் பயிர்ச் செய்கைக்கு வழங்கப்பட்ட மொத் தக் கொடுகடன் முன்னைய ஆண்டின் சிறு போகத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 263 இலட்சத்திற்கு 21 சதவீதத்தால் அதிகரித்தது. இதற்கு மக்கள் வங்கியினால் இக் காலப் பகுதியில் வழங்கப்பட்ட தொகை மும்மடங்கு அதிகரித்திருந்ததே காரண மாகும்.

பயிர்ச் செய்கைக் கடன்களின் மீளச் செலுத்தலைப் பொறுத்தளவில் 1983இன் செயலாற்றத்தில் முன்னேற்றம் காணக்கூடியதாக இருந்தது. மக்கள் வங்கி 1982/83 பெரும்போக நெற் கடன்களில் ரூ. 365 இலட்சத்தை அல்லது 72 சதவீதத்தைமீளப் பெற்றதை தரவுகள் காட்டுகின்றன. இது முன்னைய ஆண்டின் 1981/82 பெரும்போக நெற் கடன்களின் மீளப் பெற்ற வீதமான 42 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் குறிப் பிடத்தக்க முன்னேற்றமாகும். இலங்கைவங்கி ஏறத்தாழ முன்னையஆண்டில் மீளப் பெற்றவீதத்தைப்போலவே 1982/83 பெரும்போக நெற்கடன்களின் ரூ. 299 இலட் சத்தைஅல்லது 67 சதவீதத்தை மீளப் பெறக்கூடியதாக இருந்தது. அட்டன் நெச னல் வங்கி பெரும்போக நெற்கடன்களின் சிறந்த மீளப்பெறல் வீதமாக 88 சத வீதத்தை 1983 திசெம்பர் இறுதியில் கொண்டிருந்தபோதும் வழங்கப்பட்ட மொத்தக் கடன்குறைவானதாக விளங்கியது. எனினும் முன்னைய ஆண்டின் அதன் மொத்தத் தொகையுடன் ஒப்பிடும்போது 1981/82 பெரும்போக நெற்கடன்களில் 71 சதவீதத்தை மாத்திரமே மீளப்பெறக்கூடியதாக இருந்ததை கவனத்திற் கொள்ளும்போது 1983இல் மீளப்பெறல்வீதம் முன்னேற்றமான ஒன்றாக கருதப் படலாம்.

1983 பயிர்ச்செய்கையாண்டில் சிறு உணவுப்பயிர்களுக்கு வழங்கப்பட்டமொத் தக் கடன்களின் அளவு 1982இன் ரூ. 229 இலட்சத்திலிருந்து ரூ. 222 இலட்சத்

திற்கு 3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இலங்கை வங்கி மொத்தத்தில் ரூ. 158 இலட்சத்திற்கு அல்லது 72 சதவீதத்திற்கு வகைகூறியது, கடந்த ஆண்டு இந் நோக்கத்திற்காக வழங்கப்பட்ட மொத்தத் தொகையில் 69 சதவீதத்திற்கு மாத் திரமே இது வகைகூறியது.

ஒன்றிணைக்கப்பட்ட கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழ் சிறு உணவுப் பயிர்களுக்கான கொடுகடன் வழங்கலின் குறிப்பிடத்தக்க பண்பு இக்கடன்களின் பெரும்பகுதி உருளைக்கிழங்கு, வெங்காயம், மிளகாய் ஆகியன பயிரிடப்படமாத் திரமே வழங்கப்பட்ட வேளையில் அதிகளவு ஏனைய பயிர்கள் இந்நிறுவன ரீதியான கொடுகடன் அமைப்புமுறைக்கு புறம்பானதாக இருந்துவந்ததேயாகும். இப்பயிர் களுக்கான அதிகரிக்கும் கேள்வி அவற்றின் வளர்ச்சியின் ஆற்றல் பயிரிடும் முறையை மாற்றியமைப்பதன் அவசியம் போன்றவற்றினை நோக்குகையில் இத் திட்டத்தின் கீழான சிறு உணவுப்பயிர்களின் கடன்களின் அளவை அதிகரிப்பது மிக அவசியமாகின்றது.

ஒன்றிணைக்கப்பட்ட கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் 1977 சனவரி 1 இலிருந்து 1981 யூன் 30வரை வழங்கப்பட்ட பயிரிச்செய்கைக் கடன்களின் மீள் அட்டவணையிடல் திட்டத்தை இவ்வாண்டிலும் இலங்கை வங்கி தொடர்ந்தும் செயற்படுத்தியது. மீள அட்டவணையிடலுக்கான இறுதித் திகதி 1984 யூன் 30வரை நீடிக்கப்பட்டது. எனினும் இத்திட்டத்தின் முன்னேற்றம் தொடர்ந்தும் திருப்தி யற்றதாகவே இருந்துவந்ததால் ஒன்றிணைக்கப்பட்ட கிராமிய கொடுகடன் திட் டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களைப் பெறுவதற்கு பெரும்பாலான விவசாயி கள்இன்னமும் தகுதியற்றவர்களாகவே விளங்குகின்றனர்.

கிராமிய கொடுகடன் விஷயங்களில் ஈடுபாடுள்ள முக்கிய நிறுவனங்களின் பிரதிநிதிகளைக்கொண்ட கிராமியக் கொடுகடன் மதியுரைச்சபை இவ்வாண்டில் கிராமிய கொடுகடன் தொடர்பான பல முன்மொழிவுகளை கவனத்திற் கொண் டது. இது பிராந்திய கிராமிய அபிவிருத்தி வங்கிகள் ஒன்றினை நிறுவுவதற் கான முன்மொழிவையும் இறப்பர் வளர்ப்போருக்கும் கரும்பு பயிரிடு வோருக்கும் உதவுவதற்கான கொடுகடன் திட்டங்களின் அறிமுகப்படுத்தலையும் உள்ளடக்கும். கிராமிய கொடுகடன் தொழிற்பாடுகளின் துறையில் நியாயமான இலாபமட்டத்தினை அடைவதற்கு அரசதுறை வங்கிகளுக்கு உதவுவதற்கான வழி முறைகளையும் கிராமிய கொடுகடன் மதியுரைச்சபை கவனத்தில் எடுத்துக்கொண் டது. பிராந்திய கிராமிய அபிவிருத்தி வங்கிகளை அமைப்பதற்கான சட்டவரைவு ஆண்டின் இறுதிப்பகுதியில் தயாரிப்பிலிருந்தது.

மாத்தறையிலும் அனுராதபுரத்திலுமுள்ள மத்தியவங்கியின் இரு கிளைகளும் வேறு இடத்தில் விரிவாக* விளக்கப்பட்டதுபோல கிராமப்பகுதிகளில் சுயதொழிலை ஊக்குவிப்பதற்கும் கிராமிய பொருளாதாரத்தின் அபிவிருத்தியையும் வளர்ச்சி யையும் உறுதிப்படுத்தும் நோக்கத்துடனும் சிறப்புக் கிராமிய கடன் வழங்கல் நிகழ்ச்சித்திட்டத்தை தொடர்ந்தும் விரிவான அளவில் மேற்கொண்டன.

---

* இவ்விரு கிளைகளின் நடவடிக்கையின் விபரம் இரண்டாம் பகுதியின் பக்கங்கள் XXII—XXVIஇல் தரப்பட்டுள்ளது.